06.06.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தூய்மைப் பணியில் ஈடுபட்ட வேளாண் பல்கலை. மாணவர்கள்**

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாணவ-மாணவிகள் தூய்மைப் பணியில் வெள்ளிக்கிழமை ஈடுபட்டனர்.உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, வேளாண் பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேலாண்மை இயக்கம், சுற்றுச்சூழல் அறிவியல் துறை, நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவை சார்பில் வெள்ளிக்கிழமை தூய்மைப் பணித் திட்டத்தின் கீழ் சாலையை தூய்மைப்படுத்தும் பணி நடைபெற்றது. இயற்கை வள மேலாண்மை இயக்ககச் சிறப்பு அலுவலர் வ.பெ.துரைசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், வேளாண்மை முதன்மையர் ச.மகிமைராஜா சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு தூய்மைப் பணித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதில், மாணவர் நலன் இயக்குநர் ந.ரகுபதி, சுற்றுச்சூழல் அறிவியல் துறைத் தலைவர் பி.சுப்ரமணியம், நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் க.குமுதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில், நாட்டு நலப்பணித் திட்ட மாணவ-மாணவிகள் சுமார் 200 பேர், மருதமலை சாலையை சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு தூய்மைப்படுத்தினர்.

**காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி தமிழக விவசாயிகள் இன்று குடியரசுத் தலைவருடன் சந்திப்பு**

காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், காவிரியின் குறுக்கே அணை கட்டும் முயற்சியை தடுக்க வேண்டும்,

குறுவை சாகுபடிக்கு தேவையான உதவிகளை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் இன்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை சந்தித்து மனு அளிக்க உள்ளனர். இதற்காக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் பி.ஆர்.பாண்டியன் தலைமையில் தமிழக விவசாயிகள் தில்லி சென்றுள்ளனர்.

**கடலோரத் தமிழகத்தில் இன்று மழைக்கு வாய்ப்பு**

புதுவை, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் சனிக்கிழமை (ஜூன் 6) இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: அரபிக் கடலில் லட்சத் தீவுகளுக்கு அருகில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இது அதே இடத்தில் நீடிக்கிறது. இன்னும் 48 மணி நேரத்தில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக அது வலுப்பெறும்.

ஆனாலும் இதன் காரணமாக தமிழகத்தில் மழை பெய்யாது. வெப்பச்சலனத்தின் காரணமாகவே தமிழகத்தில் மழை பெய்யும். உள்தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும். அதேவேளையில் கடலோர மாவட்டங்கள், புதுவையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று தெரிவித்தனர். இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் சேலத்தில் 70 மி.மீ. மதுரையில் 50 மி.மீ. மழை பதிவானது.

**பலாப்பழ விற்பனை அமோகம்**

காஞ்சிபுரத்தில் பண்ருட்டி பலாப்பழங்கள் விற்பனை அதிகரித்துள்ளது. இதனால், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோடை கால பழமான பலாப்பழங்கள், பண்ருட்டியில் இருந்து காஞ்சிபுரம் ராஜாஜி சந்தைக்கு தற்போது அதிக அளவு வருகின்றன. பண்ருட்டியைச் சேர்ந்தவர்களே நேரடியாக இங்கு வந்து பலாப் பழங்களை விற்பனை செய்கின்றனர். சந்தையில் இருந்து காஞ்சிபுரத்தின் நகரப் பகுதி மட்டுமின்றி வாலாஜாபாத், உத்தரமேரூர், பெருநகர், சிறுகாவேரிப்பாக்கம், ஐயன்பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் வியாபாரிகள் சில்லறையாகவும், மொத்தமாகவும் பலாப்பழங்களை வாங்கிச் செல்கின்றனர். மேலும் தள்ளுவண்டி வியாபாரிகளும் பெருமளவில் பழாப் பழங்களை விற்பனைக்கு வாங்கிச் செல்கின்றனர். கால் கிலோ பலாப்பழம் ரூ. 25க்கு விற்கப்படுகிறது. இங்கு முழு பலாப்பழம் எடைக்குத் தகுந்தவாறு ரூ. 200 வரை விற்பனையாகிறது. பொதுமக்கள் பலர் பலாப் பழங்களை அதிக ஆர்வத்தில் வாங்கி செல்வதால் விற்பனை அதிகரித்துள்ளது. இதுகுறித்து பண்ருட்டியைச் சேர்ந்த வியாபாரிகள் கூறியது: கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு விளைச்சல் குறைவாக உள்ளது. மாதத்துக்கு 30 முதல் 40 டன் பலாப்பழம் கிடைக்கும். தற்போது சீசன் காலம் என்பதால் 2 முதல் 3 மாதங்கள் வரை இங்கு வந்து விற்பனை செய்வோம். பல ஆண்டுகளாக காஞ்சிபுரத்துக்கு வந்து விற்பனை செய்கிறோம். அதிகளவு விற்பனையாகி வருகிறது என்றனர்.

**பயிர்க் காப்பீட்டை உயர்த்த வேண்டும்: ஸ்டாலின்**

தமிழக அரசு, விவசாயிகளுக்கான பயிர்க் காப்பீட்டை உயர்த்தி வழங்க வேண்டும் என்று திமுக பொருளாளர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: பயிர்க் காப்பீடு கோரி அரிமங்கலம் அருகேயுள்ள கீழநிலைக்கோட்டையைச் சேர்ந்த விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். பருவ மழை தவறியதன் காரணமாக விவசாயிகள் கடும் இழப்பைச் சந்தித்துள்ளனர். இந்த நிலையில், பயிர்க் காப்பீட்டை நம்பித்தான் சிறு மற்றும் குறு விவசாயிகள் இருக்கின்றனர். விவசாயிகளின் நிதி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு, வேளாண் கட்டமைப்புகளை திறம்பட செயல்படுத்த வேண்டிய பொறுப்பு அரசினுடையதாகும். எனவே தமிழக அரசு விவசாயிகளுக்கான பயிர்க் காப்பீட்டை உயர்த்தி வழங்க வேண்டும். அதனை உரிய நேரத்தில் வழங்கிட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**இயற்கை வளங்களை குறைவாக பயன்படுத்த வேண்டும்: ஜாவடேகர் வலியுறுத்தல்**

மாறி வரும் பருவநிலையைக் கருத்தில்கொண்டு, நீர் உள்ளிட்ட இயற்கை வளங்களை குறைந்த அளவில் பயன்படுத்த வேண்டும் என மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் வலியுறுத்தினார். உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி (ஜூன் 5), தில்லியில் செய்தியாளர்களிடம் அவர் வெள்ளிக்கிழமை கூறியதாவது: உலகில் இயற்கை வளங்கள் மிகவும் குறைந்து வருகின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் தனது தேவைக்கேற்ப இயற்கை வளங்களை மனித இனம் அழித்து வருகிறது. இதன் விளைவாக, பருவநிலை மாற்றமானது உலகின் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இது மிகவும் தீவிரமான பிரச்னை. இதனை நாம் கண்டுகொள்ளாவிட்டால் இயற்கையின் கடுமையான எதிர்விளைவுகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கும்.

உலகம் தோன்றிய காலகட்டம் முதல், கடந்த 50 ஆண்டுகாலமாக மட்டுமே இயற்கை வளங்களில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

உலகில் தற்போது வெறும் 3 சதவீத அளவு மட்டுமே பருகுவதற்கு உகந்த நீர் இருக்கிறது. எதிர்காலத்தில் இந்த அளவும் குறைய நேரிட்டால், மனித இனம் அழிவை நோக்கிச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகள், தனி மனிதன் என அனைவருக்கும் இயற்கை வளங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். இயற்கை வளங்களை குறைந்த அளவில் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் வர வேண்டும். நீர், மின்சாரம், உணவு தானியங்கள், உரங்கள், மணல், கற்கள் என அனைத்துமே இயற்கை வளங்கள்தான். இவை ஒவ்வொன்றும் உலகின் இயற்கை சமநிலையை தக்க வைக்க உதவுகின்றன. அவ்வாறான இயற்கை வளங்களை பாதுகாப்பது நமது கடமை. இந்த விழிப்புணர்வுப் புரட்சி ஏற்பட்டால் மட்டுமே இயற்கை வளங்களை நாம் அழிவிலிருந்து பாதுகாக்க முடியும் என்றார் பிரகாஷ் ஜாவடேகர்.

**லாபம் தரும் தினை சாகுபடி**

சிறுதானிய வகைகளில் ஒன்றான தினை பயிரிட்டால் அதிக அளவில் லாபம் கிடைக்கும். பொதுவாக, தினை கடுமையான வறட்சியையும் தாங்கி வளரக் கூடியது. ஆடி, புரட்டாசிப் பட்டம் இந்தப் பயிருக்கு ஏற்றதாகும். மனிதன் 40 வயது முதல் சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம், சத்து குறைபாடு உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு ஆளாகிவருவதால், சிறுதானியங்களை உண்பது அதிகரித்து வருகிறது. மக்கள் அதிகம் பயன்படுத்தும் பொருளாக தினை உள்ளதால், சந்தையில் எப்போதும் விற்பனை வாய்ப்பு அதிகம் இருக்கும். "லவ் பேட்ஸ்' எனப்படும் காதல் பறவைகளுக்கும் மிகவும் பிடித்தமான தீனி தினையாகும். தற்போது கடைகளில் ஒரு கிலோ தினை ரூ. 80 முதல் ரூ. 90 வரை விற்கப்படுகிறது. தினை சாகுபடிக்கு ஏற்ற நிலம்: செம்மண்,

இருமண் கலந்த மண் சிறந்தது. கோடை மழையை பயன்படுத்தி பயிர் அறுவடைக்குப் பின்பு நிலத்தை சட்டிக் கலப்பையைக் கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். கோடை உழவால் மண் அரிமானம் தடுக்கப்பட்டு, மழைநீர் சேமிக்கப்படுவதுடன் கோடை மழையில் முளைக்கும் களைகள் கட்டுப்படுத்தப்படும். நிலத்தடியில் இருக்கும் கூட்டுப் புழுக்கள் உழவின்போது மேலே கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுவதால் பயிர்க் காலத்தில் பூச்சிகளின் தாக்குதல் குறையும். விதை அளவு: தினை விதையை வரிசையாக விதைத்தால் ஒரு ஹெக்டேருக்கு 10 கிலோ தேவைப்படும். விதையைத் தூவினால் ஒரு ஹெக்டேருக்கு 12.5 கிலோ தேவைப்படும். இடைவெளி: வரிசைக்கு வரிசை 25 செ.மீட்டரும், செடிக்குச் செடி 10 செ.மீட்டரும் இருக்க வேண்டும்.

விதை விதைப்பு: கை விதைப்பு அல்லது விதைப்பான் கருவி கொண்டு வரிசையாக விதைப்பு செய்யலாம். இப்படிச் செய்வதால் அதிக பரப்பில் மண் ஈரம் காயும் முன்பே விதைத்து முடிக்கலாம். விதை நேர்த்தி: ஒரு ஹெக்டேருக்கு தேவையான விதையளவுக்கு 600 கிராம் அசோபாசை அரிசிக் கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். நிலத்தில் இடுவதாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு 2 கிலோ அசோபாசை 25 கிலோ மணல், 25 கிலோ தொழுஉரம் கலந்து தூவ வேண்டும். உரமிடுதல்: ஒரு ஹெக்டேர் நிலத்தில் அடியுரமாக 12.5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பி பிறகு நிலத்தை உழ வேண்டும். பின்னர் 20 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச் சத்து ஆகியவற்றை விதைப்பின்போது அடியுரமாக இட வேண்டும். மேலுரமான 20 கிலோ தழைச்சத்தை விதைத்த 20-25 நாள்கள் கழித்து கிடைக்கும் ஈரத்தை பயன்படுத்தி இட வேண்டும். களை நிர்வாகம்: விதைத்த 18 முதல் 20-ஆம் நாளில் களை எடுத்தல் அவசியம். பின்னர் 40-ஆம் நாளில் தேவைப்பட்டால் இன்னொரு முறையும் களை எடுக்கலாம்.

பயிர் களைதல்: விதைத்த 18 முதல் 20 -ஆம் நாளில் செடிகளைக் களைத்து தேவையான பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு தேவையில்லை: இந்தப் பயிரை பொதுவாக பூச்சிகள். நோய்கள் தாக்குவதில்லை. ஆதலால், பயிர் பாதுகாப்பு அவசியமில்லை. உயர் விளைச்சலைத் தரக்கூடிய ரகத்தை பயன்படுத்தும்போது நல்ல விளைச்சலைப் பெறலாம். அறுவடையும், விளைச்சலும்..: கதிர்கள் நன்கு காய்ந்து இலைகள் பழுத்தவுடன் அறுவடை செய்து களத்தில் காயவைத்து அடித்து தானியங்களை பிரித்து சுத்தம் செய்ய வேண்டும். தோராயமாக ஒரு ஹெக்டேருக்கு 1,850 கிலோ தானிய விளைச்சலையும், 5,500 கிலோ தட்டை விளைச்சலையும் பெறலாம். இவ்வாறு கிடைக்கும் தானியத்தை சாக்குப் பையில் போட்டு போத்து நீண்ட காலம் பாதுகாக்க முடியும். மதிப்பூட்டப்பட்ட பொருள்கள்: தினையில் இருந்து அவல், உப்புமா, தோசை, புட்டு, முறுக்கு, பக்கோடா உள்ளிட்ட சுவையான உணவையும் தயாரிக்க முடியும்.

**நவீன தொழில்நுட்பங்கள் மூலம் மானாவாரி நிலக்கடலையில் கூடுதல் விளைச்சல் பெறலாம்**



•

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மானாவாரி நிலக்கடலையில் அதிக மகசூல் பெறலாம் என, நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி தெரிவித்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

தமிழகத்தின் மொத்தப் பரப்பில் சுமார் 50 சதவீதம் வானம் பார்த்த பூமியாகும். மானாவாரி நிலங்களில் குறைந்த மகசூலே கிடைக்கிறது. இதற்கு, பருவம் தவறிய மழை, மழை அளவில் நிலையில்லாத தன்மை, குறைந்த கால மழைப் பருவம், அதிக அளவு மண் அரிப்பு ஆகியவை முக்கிய காரணங்களாகும். சில நவீன யுக்திகளை கையாண்டு மானாவாரி சாகுபடியிலும் நல்ல மகசூல் பெறலாம். தமிழகத்தில் 52 விழுக்காடு மானாவாரி நிலமாகவும், இந்நிலங்களில் பயிரிடப்படும் பயிர்களில் 14 சதவீதம் எண்ணெய் வித்துக்களாகவும் உள்ளன. அதிலும் நிலக்கடலை சாகுபடி மிகவும் முக்கியமான மானாவாரி பயிராக விளங்குகிறது. சுமார் 80 சதவிகிதத்திற்கு மேல் நிலக்கடலை பயிரையே மானாவாரி நிலங்களில் பயிர் செய்கின்றனர். நம் நாட்டில் பெரும்பாலான சிறு, குறு விவசாயிகளின் நிலம் மானாவாரி நிலமாகவே உள்ளது.

நிலக்கடலை உற்பத்தியில் நம் நாடு இரண்டாமிடத்தை பிடித்துள்ளது. இது தாவர எண்ணெய் உற்பத்தியில் முக்கிய இடம் பெறுவதோடு நல்ல தரம் வாய்ந்த புரதம் மற்றும் தேவையான அளவு சத்துக்கள் அடங்கிய உணவுப் பொருளாக பயன்படுகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நிலக்கடலைப் பயிரை மானாவாரியாக சாகுபடி செய்யும் போது கீழ்க்கண்ட உத்திகளைக் கையாள வேண்டும்.

ரகங்கள்: வி.ஆர்.ஐ. 2, 3, டி.எம்.வி. 7, 12, கோ-1, 2, ஜே.எல்-24 ஆகிய ரகங்கள் ஏற்றவையாகும். விதை அளவு: ஒரு ஏக்கருக்கு 50 முதல் 55 கிலோ வரை நிலக்கடலைப் பருப்பு தேவைப்படும்.

நோய்களைத் தடுக்க விதை நேர்த்தி செய்தல்: மானாவாரி நிலக்கடலையில் பயிர் எண்ணிக்கை பராமரிக்காததே மகசூல் குறைவுக்கு முக்கிய காரணமாக உள்ளது. தண்டழுகல் நோய், வேர் அழுகல் நோய் ஆகியவை தாக்குவதால் பயிரின் வேர், தண்டு, அழுகி, கருகி பயிர் எண்ணிக்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. இதைத் தடுக்க விதை நேர்த்தி செய்வது மிகவும் அவசியமாகிறது. பூசணக்கொல்லி விதை நேர்த்தி: ஒரு

கிலோ விதையுடன் உரம் 4 கிராம் (அல்லது) கார்பன்டாசிம் 2 கிராம் இதில் ஏதேனும் ஒன்றை கலந்து வைத்து அடுத்த நாள் விதைக்கலாம்.

உயிரியல் மருந்து விதை நேர்த்தி:டிரைக்கோடெர்மா விரிடி என்ற நன்மை செய்யும் பூஞ்சாணத்தை விதைப்பதற்கு முன் விதையுடன் கலந்து அடுத்த நாள் விதைக்கலாம். நுண்ணுயிர் விதைநேர்த்தி: ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் ஒரு ஏக்கருக்கான விதையுடன் 200 கிராம் ரைசோபியம் (ஒரு பொட்டலம்) மற்றும் 200 கிராம் பாஸ்போ பாக்டீரியா (ஒரு பொட்டலம்) ஆகியவற்றை ஒரு லிட்டர் ஆறிய வடிகஞ்சியில் கொட்டி நன்கு கலக்க வேண்டும். விதைகளை சாக்கு பையின் மேல் பரப்பவேண்டும். கஞ்சியுடன் கலந்த நுண்ணுயிர் கலவையை விதைகளின் மேல் ஒரு இலைக்கொத்து கொண்டு நன்கு தெளிக்கவேண்டும். சாக்குப் பையின் மீது உள்ள விதைகளை மேலும் கீழும் புரட்டி நுண்ணுயிர் நன்கு விதைகளின் மேல் படும்படி செய்யவேண்டும்.

15 - 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி 24 மணிநேரத்திற்குள் இதனை விதைக்கவேண்டும்.

அதாவது, முதலில் நோய்களிலிருந்து பாதுகாக்க பூஞ்சாண விதை நேர்த்தி செய்துவிட்டு, அடுத்ததாக உயிர் உர விதை நேர்த்தி செய்து அதன்பின் 24 மணிநேரம் கழித்து விதைக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

உரமிடுதல்: பெரும்பாலும், மானாவாரி நிலங்களில் உரமிடுதல் என்பது மிகவும் குறைவு என்றே சொல்லலாம். ஆனால், வேளாண் ஆராய்ச்சியில் மானாவாரியில் மகசூல் அதிகரிக்க உரமிடுதல் அவசியம் என்று தெளிவாகியுள்ளது. குறிப்பாக, நிலக்கடலையில் மேலுரமிடுவதைத் தவிர்த்துவிட்டு அடியுரமாகவே உரமிடல் வேண்டும். மானாவாரி நிலத்திற்கு ஊட்டமேற்றிய தொழு உரம் இடுதல் சாலச் சிறந்ததாகும்.

விதைப்பதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு ஒரு வண்டி

(300 கிலோ) மட்கிய குப்பையுடன் 25 கிலோ சூப்பர் பாஸ்பேட் (அரை மூட்டை) 30 கிலோ பொட்டாஷ் (சுமார் அரை மூட்டை) ஆகியவற்றை நன்கு கலந்து, காற்றுப்புகாமல் களிமண் மூலம் மூடிவிட வேண்டும். விதைக்கும் போது இந்தக் குப்பை மற்றும் உரங்களுடன் யூரியா 9 கிலோவைச் சேர்த்து நன்கு கலக்கவேண்டும். இவற்றை கடலைப் பருப்பு சால் விடும் போது, அந்தப் படைக்காலில் தூவவேண்டும். டிராக்டர் மூலம் பருப்பு விதைத்தால், கடைசி உழவின்போது ஊட்டமேற்றிய தொழுவுரத்தை இட்டுவிடலாம். ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க இயலாத நிலையில் நேரடியாக 25 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 30 கிலோ பொட்டாஷ் உரத்தை கலந்து விதைப்பின் போது இடலாம். ஜிப்சம் இடுதல்: நிலக்கடலை உற்பத்தியை அதிகரிக்க பயிருக்கு ஜிப்சம் இடுதல் மிகவும் அவசியம். ஜிப்சத்தில் 23 சதவீதம் சுண்ணாம்புச் சத்தும், 18 சதவீதம் கந்தகச் சத்தும் அடங்கியுள்ளது. இதில் சுண்ணாம்புச் சத்தானது காய்கள் திரட்சியாகவும், அதிக எடை உடையதாக உருவாகவும் வழி செய்கிறது. கந்தகச் சத்து நிலக்கடலையில் எண்ணெய்ச் சத்தை அதிகரிக்கிறது. ஒரு ஏக்கருக்கு 80 கிலோ (2 மூட்டை) ஜிப்சத்தை அடியுரமாகவே இடவேண்டும். அதன்பின்பு விதைத்த 40-45-ஆம் நாளில் பூப்பிடிக்கும் தருணத்தில் மீண்டும் ஒருமுறை ஒரு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தை இட்டு மண் அணைக்க வேண்டும். இவ்வாறு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மானாவாரி நிலக்கடலையில் அதிக மகசூல் பெறலாம் என தெரிவித்துள்ளார். "மானாவாரி நிலங்களில் உரமிடுதல் என்பது மிகவும் குறைவு என்றே சொல்லலாம். ஆனால், வேளாண் ஆராய்ச்சியில் மானாவாரியில் மகசூல் அதிகரிக்க உரமிடுதல் அவசியம் என்று தெளிவாகியுள்ளது. குறிப்பாக, நிலக்கடலையில் மேலுரமிடுவதைத் தவிர்த்துவிட்டு அடியுரமாகவே உரமிடல் வேண்டும். மானாவாரி நிலத்திற்கு ஊட்டமேற்றிய தொழு உரம் இடுதல் சாலச் சிறந்ததாகும்."

**நெல் பயிர்களில் நோய்த் தாக்குதல்: வேளாண் அதிகாரிகள் ஆய்வு**

கும்மிடிப்பூண்டியை அடுத்த மாநெல்லூர், பல்லவாடா பகுதிகளில் இலைச் சுருட்டு, தண்டுத் துளைப்பான் பூச்சியால் பாதிக்கப்பட்ட நெல் பயிர்களை வேளாண்மைத் துறை உயர் அதிகாரிகள் வெள்ளிக்கிழமை நேரில் ஆய்வு செய்தனர். மாநெல்லூரில் 150 ஏக்கர்களிலும், பல்லவாடாவில் 90 ஏக்கர்களிலும் நெல் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இந்த நெல் பயிர்கள் கடந்த சில நாள்களாக பசுமைத் தன்மையை இழந்து பழுப்பு நிறமாக மாறின. இதைக் கண்டு விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

தகவலறிந்த கும்மிடிப்பூண்டி வேளாண்மைத் துறை அதிகாரிகள் மாநெல்லூர், பல்லவாடா பகுதியில் கடந்த இரு நாள்களாக நேரில் ஆய்வு செய்து வருகின்றனர். மாவட்ட வேளாண் தரக்கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் எல்.சுரேஷ், உதவி இயக்குநர் சண்முகையா, வேளாண் அலுவலர் அறிவழகன், துணை வேளாண் அலுவலர் ராஜேந்திரன், உதவி வேளாண் அலுவலர்கள் சாரதி, சிவக்குமார், சுகுணா உள்ளிட்ட வேளாண் துறையினர் மாநெல்லூரில் நோய்த் தாக்குதலுக்கு உள்ளான நெல் பயிர்களை வெள்ளிக்கிழமை நேரில் ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது:

சுமார் 30 ஏக்கர் நெல் பயிர்களை இலைச் சுருட்டுப் புழு நோயும், தண்டுத் துளைப்பான் பூச்சி நோயும் பாதித்துள்ளன. இதற்கு அதிக அளவில் யூரியா உரங்களை பயன்படுத்தியதுதான் காரணம். மேலும், நெல் பயிர்களுக்கு அளவுக்கு அதிகமான அளவில் நீர் பாசனம் செய்து நிலத்தில் தண்ணீர் தேங்கியுள்ளதும், காலம் தாழ்த்திய நெல் பயிரிடுதலும் மற்றொரு காரணம். அதிக அளவு தழைச் சத்து உள்ள நிலையில், முதல்கட்டமாக நெருக்கமாக உள்ள நெல் பயிர்களை விலக்கி வைத்து நிலத்தில் நீர் வடியச் செய்ய வேண்டும். தொடர்ந்து, வேப்ப எண்ணெய்

கலந்த அசாடரக்டின் என்ற மருந்தை ஏக்கருக்கு 400 மில்லி லிட்டர் தெளிக்க வேண்டும். இந்தப் பூச்சிக் கொல்லியை பயிரின் அடிப்பாகத்தில் கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

மேலும், விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி முறையைப் பின்பற்றினால் இது போன்ற பயிர்ச் சேதம் தவிர்க்கப்படும். பயிர்ப் பாதுகாப்பு காப்பீடு செய்த விவசாயிகளுக்கும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பயிர்க் கடன் வாங்கியுள்ள விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்கப்படும். பாதிக்கப்பட்ட நெல் பயிரின் மாதிரி, திரூரில் உள்ள ஆராய்ச்சி மையத்தில் ஆய்வு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்படும் என்றனர். ஆய்வின்போது, மாநெல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் கோபி, துணைத் தலைவர் மல்லிகார்ஜுனா, வார்டு உறுப்பினர் ஏ.சம்பத், கிராம நிர்வாக அலுவலர் சம்பத் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## "குறுவை சாகுபடி பாதிப்பு: ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்'

காவிரி ஆற்றில் தண்ணீர் திறக்கப்படாததால் குறுவை நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தினார். இதுதொடர்பாக வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததைக் காரணம் காட்டி நடப்பு ஆண்டும் குறுவை பாசனத்துக்காக ஜூன் 12-ஆம் தேதி காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்படாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இதனால், காவிரி பாசன விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். மேட்டூர் அணையில் இருந்து காவிரியில் தண்ணீர் திறந்து விடாததால் ஏற்படும் பாதிப்புகளை ஈடுகட்ட, காவிரி பாசன மாவட்டங்களில் விவசாயத்துக்காக ஒவ்வொரு நாளும் 12 மணி

நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படும். விவசாயத்துக்குத் தேவையான கருவிகள் வாடகையின்றி வழங்கப்படும். நுண்ணூட்டச் சத்து மானியம், இலவச ஜிப்சம் ஆகியவை வழங்கப்படும். இந்தத் தொகுப்புத் திட்டத்துக்காக ரூ.40.97 கோடி செலவிடப்படும் என்றும் ஜெயலலிதா அறிவித்தார். இதில் புதிதாக எதுவுமில்லை. கடந்த 3 ஆண்டுகளாக அறிவித்த தொகுப்புத் திட்டத்தை புதிய திட்டம் போல அறிவித்துள்ளார். 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவிவரும் வறட்சியால், மீள முடியாத கடன் சுமைக்கு ஆளாகியுள்ள விவசாயிகளால் இந்த ஆண்டும் குறுவை நெல் சாகுபடி இல்லாததால் ஏற்படும் பாதிப்பை தாங்க முடியாது. இதைக் கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். மேலும், விவசாயிகளின் பயிர்க் கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும். அதேபோல, வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் உழவுத் தொழிலாளர்களுக்கு ஒருமுறை உதவியாக ரூ.15,000 வழங்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

**கொடைக்கானலில் மரக்கன்றுகள் நடும் விழா**

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கொடைக்கானல் சன் அரிமா சங்கம் மற்றும் 12-ஆவது வார்டு பொது நலச் சங்கம் சார்பில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு கொடைக்கானல் சன் அரிமா சங்கத்தின் பட்டயத் தலைவர் டி.பி.ரவீந்திரன் தலைமை வகித்தார். வருவாய் கோட்டாட்சியர் சுரேஷ் மரக்கன்றுகளை நட்டு விழாவை தொடக்கி வைத்தார். நகர்மன்ற உறுப்பினர் ஆஷா ரவீந்திரன் வரவேற்றார். இந் நிகழ்ச்சியில் கொடைக்கானல் டி.எஸ்.பி. சந்திரன், கோடை பண்பலை நிகழ்ச்சி இயக்குநர் நடராஜன், வனத்துறை ரேஞ்சர் தெய்வ சர்மா, கொடைக்கானல் நகராட்சி ஆய்வாளர்கள் தங்கப்பாண்டி, ராஜாமணி மற்றும் சங்க நிர்வாகிகள் முனுசாமி, செந்தில்,சாம்,சிவா,

உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர் நகர்நல அலுவலர் ராம்குமார் நன்றி கூறினார்.

## வனத்துறை மூலம் விவசாயிகளுக்கு 5 லட்சம் மரக்கன்றுகள்

கன்னிவாடி, வத்தலகுண்டு மற்றும் அய்யலூர் வனச் சரகம் சார்பில், விவசாயிகளுக்கு 5 லட்சம் மரக் கன்றுகள் வழங்கப்படும் என மாவட்ட வன அலுவலர் த.சம்பத் வியாழக்கிழமை தெரிவித்தார்.

தனியார் பட்டா நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டத்தின் கீழ், வனத்துறை சார்பில் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி நிகழாண்டில் தேக்கு, சில்வர் ஓக், குமிழ், பூவரசு, புளி, பெரும் மரக் (தீக்குச்சி மரம்) கன்றுகள் என 5 லட்சம் கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து மாவட்ட வன அலுவலர் த.சம்பத் கூறியது: கன்னிவாடி சரகத்தில் கே.சி.பட்டி, ஆடலூர், பன்றிமலை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளின் தேவைக்காக 2 லட்சம் கன்றுகளும், வத்தலகுண்டு சரகத்தில் தாண்டிக்குடி, காமனூர், மணலூர், பெரும்பாறை போன்ற பகுதிகளுக்கு 2 லட்சம் கன்றுகளும், அய்யலூர் வனச் சரகத்தில் 1 லட்சம் கன்றுகளும் வழங்கப்பட உள்ளன. ஒரு ஏக்கரில் தீக்குச்சி மரம் வளர்க்கும் விவசாயிகள், ஆண்டுக்கு ரூ.1.50 லட்சம் வருமானம் பெற முடியும். இதனால், தீக்குச்சி மரம் வளர்க்க விவசாயிகள் மத்தியில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது என்றார்.

## காரைக்குடியில் மழை

காரைக்குடியில் வெள்ளிக்கிழமை மாலையில் இடியுடன் கனமழை பெய்ததால், சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

காரைக்குடியில் கோடை வெயில் வாட்டி வந்த நிலையில், வெள்ளிக்கிழமை பிற்பகலில் மேகமூட்டம் காணப்பட்டது. பின்னர், மாலை 4 மணியளவில் காற்றுடன் மிதமான மழை பெய்தது. தொடர்ந்து, இடி, மின்னலுடன் கனமழையாக சுமார் 1 மணி நேரம் பெய்தது. வெப்பம் தணிந்து குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவியது. இதனால், காரைக்குடி முக்கியச் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. சாலைகளில் பள்ளம் தெரியாமல் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்பட்டனர். இதையடுத்து, சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக மின்தடை ஏற்பட்டதால், அனைத்துத் தரப்பினரும் அவதிப்பட்டனர்.

**சட்டப் பணிகள் ஆணைக் குழு சார்பில் உலக சுற்றுச் சூழல் தினம்**

விருதுநகர் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு சார்பில், ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உலக சுற்றுச் சூழல் தின விழா, முதன்மை அமர்வு நீதிபதி மற்றும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு தலைவர் ஆர்.தாரணி தலைமையில் நடைபெற்றது. மகளிர் நீதிமன்ற மாவட்ட நீதிபதி என்.ராஜலட்சுமி முன்னிலை வகித்தார். மாவட்ட தலைமை குற்றவியல் நீதிபதி ஜான் ஆர்.டி.சந்தோஷம் வரவேற்றார். மாற்று சமரச தீர்வு மையத்தின் முன்பு மரக்கன்று நட்டு விழாவை முதன்மை அமர்வு நீதிபதி ஆர்.தாரணி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் நீதிபதிகள் பத்மா, எஸ்.கோவிந்தராஜ், பசும்பொன் சண்முகையா, நீதிமன்றப் பணியாளர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் கலந்து கொண்டனர்.

**உலக சுற்றுச்சூழல் தின விழிப்புணர்வுப் பேரணி**

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, ஈஷா பசுமைக் கரங்கள், பெருந்துறை பசுமை இயக்கம், ஈரோடு மாவட்ட பள்ளிக் கல்வித் துறை ஆகியன சார்பில் வெள்ளிக்கிழமை விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

பெருந்துறை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவிற்கு, பெருந்துறை பசுமை இயக்க துணைத் தவைர் ஆறுமுகம் தலைமை வகித்தார். பெருந்துறை டி.எம்.டபிள்யூ நிறுவன முதன்மை நிர்வாக அதிகாரி என்.சண்முகம், இயக்குநர் சுவாமிநாதசாமி ஆகியோர் பேரணியைத் தொடங்கி வைத்தனர்.பெருந்துறை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொடங்கிய இப்பேரணி, நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று மீண்டும் பள்ளி வளாகத்தில் முடிவடைந்தது. இதில், பெருந்துறை பசுமை இயக்கம், பெருந்துறை ஈஷா பசுமைக் கரங்கள், ஈரோடு மண்டல இந்திய தொழில் கூட்டமைப்பு, இளம் இந்தியர்கள் அமைப்பு, இந்திய செஞ்சிலுவைச் சங்கம், ரோட்டரி சங்கம், அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கூடலூரில் உலக சுற்றுச்சூழல் தினம்**

கூடலூரில் உலக சுற்றுச்சூழல் தின விழா வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. கூடலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இவ்விழாவுக்கு, பள்ளித் தலைமை ஆசிரியரும், சுற்றுச்சூழல் இயக்குநருமான ராபர்ட் தலைமை வகித்து, புவி வெப்பமடைதல் மற்றும் மரங்களை வளர்ப்பதன் அவசியம் குறித்துப் பேசினார்.

நீலகிரி மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர் சிவதாஸ், ஆசிரியர் ராஜகோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஆசிரியர் டெய்சி விமலா ராணி வரவேற்றார். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் சுரேஷ் குமார் நன்றி கூறினார். தொடர்ந்து, நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியில் அனைத்துப் பள்ளி மாணவ, மாணவிகள், நகராட்சி ஆணையர் ஓ.ராஜாராம், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**சுற்றுச்சூழல் தினம்: மரக்கன்றுகள் நடும் விழா**

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, வேலூர் சட்டப் பணிகள் ஆணைக் குழு சார்பில் வேலூர் மாற்றுமுறை தீர்வு மைய வளாகத்தில் வெள்ளிக்கிழமை மரக்கன்றுகள் நடப்பட்டன. சட்டப் பணிகள் ஆணைக்குழுத் தலைவரும், மாவட்ட முதன்மை நீதிபதியுமான தீனதயாளன் மரக்கன்றுகளை நட்டு அந்தப் பணியைத் தொடக்கி வைத்தார். இதில் நீதித்துறை நடுவர்கள் இளங்கோ, மஞ்சுளா, மதுசூதனன், மும்மூர்த்தி, ரேவதி, மீனசந்திரா, சுபாஷினி, அனுஷா உள்ளிட்டோர் பங்கேற்று மரக்கன்றுகளை நட்டனர்.

வேலூர் மத்தியச் சிறை வளாகத்தில் சிறை கண்காணிப்பாளர் கருப்பண்ணன்,

வேலூர் வனச்சரகர் சுப்பிரமணியன், வனவர் பிரதீப்குமார், சட்டப் பணிகள் ஆணைக்குழு நிர்வாக அலுவலர் கேசவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பொறியியல் கல்லூரியில் வேலூர் தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு உறுதிமொழியை ஆசிரியர்கள், மாணவர்கள் வெள்ளிக்கிழமை ஏற்றனர். அதைத் தொடர்ந்து வேலூரும், சுற்றுச்சூழல் பாதிப்பும் என்ற தலைப்பில் விவாதம் நடத்தப்பட்டது.

கல்லூரி முதல்வர் பொறுப்பு ஜே.மராம்பாபு, சுற்றுச்சூழல் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ப.மணிவேல், பேராசிரியர்கள் சாந்தி, தமிழ்செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அரசுப் பள்ளியில்...

ஜங்காலப்பள்ளி கிராமத்தில் அரசினர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தாராபடவேடு இந்தியன் வங்கிக் கிளை மேலாளர் எஸ்.முரளி ஆறுமுகம் மரக்கன்று நடும் பணியைத் தொடக்கி வைத்தார்.

இதில் தலைமை ஆசிரியர் முரளீதர், தேசிய பசுமைப் படை ஒருங்கிணைப்பாளர் மார்கசகாயம், ஆசிரியர்கள், 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். திருப்பத்தூரில்...

வாணியம்பாடி, ஜூன் 5: உலக சுற்றுச்சூழல் தினம் முன்னிட்டு திருப்பத்தூர் கிளை சிறைச் சாலையில் 150 மரக்கன்றுகள் வெள்ளிக்கிழமை நடப்பட்டன. நிகழ்ச்சிக்கு சிறைத்துறை கண்காணிப்பாளர் என்.வெங்கடேசன் தலைமை வகித்தார். இதில் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிபதி மும்தாஜ்பேகம் கலந்துகொண்டு சிறை வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். திருப்பத்தூர் வட்டாட்சியர் ராஜசேகர், சார்நிலை கருவூல அலுவலர் ஆனந்தன் ஆகியோரும் மரக்கன்றுகளை நட்டனர். பின்னர் சிறைக் காவலர்கள், சிறையில் விசாரணை கைதிகளும் வளாகத்தில் 150 மரக்கன்றுகளை நட்டுவித்தனர். முதல்நிலை தலைமைக் காவலர் பி.எழிலரசன் நன்றி கூறினார்.

குடியாத்தத்தில்...

குடியாத்தம், ஜூன் 5: குடியாத்தம் சூரியோதயா தொடக்கப் பள்ளியில் உலக சுற்றுச் சூழல் தின விழா வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு பள்ளித் தாளாளர் பிலிப் பக்தபிரசன்னா தலைமை வகித்தார். தலைமையாசிரியை ஜெனீப்பர் பிலிப் முன்னிலை வகித்தார். ஆசிரியர் எம். சுந்தரமூர்த்தி வரவேற்றார். குடியாத்தம் வனத்துறை அலுவலக வனவர் ஆர். ரவி சிறப்புரையாற்றி, ரோட்டரி சங்க பிரமுகர் டி. ராஜேந்திரன் இலவசமாக வழங்கிய சுமார் 1000 மரக்கன்றுகள், காய்கறிச் செடிகளை மாணவர்களுக்கு வழங்கினார். ஆசிரியை விக்டோரியா செல்வி நன்றி கூறினார். ராணிப்பேட்டையில்...

ராணிப்பேட்டை,ஜூன் 5: ராணிப்பேட்டை ஸ்டால் இந்தியா நிறுவனத்தில் உலக சுற்றுச்சூழல் தின விழா, வானாபாடி திருமுருகன் அரசு நிதி பள்ளிக்கு ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் கல்வி உபகரணங்கள், ஆர்.ஓ. பிளாண்ட் ஆகியன வழங்கும் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு நிறுவன இயக்குநர் மணிமாறன் தலைமை வகித்தார். இதில் நிறுவன நிர்வாக இயக்குநர் டெரினியர் டுன்ஜே கலந்துகொண்டு

தொழிற்சாலை வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டார். பின்னர் உலக சுற்றுச்சூழல் தினத்தின் அவசியம் குறித்து பேசினார். தொடர்ந்து தொழிலகங்களின் சமூக மேம்பாட்டுப் பணியின் ஒரு பகுதியாக வானாபாடி அரசு நிதி உதவி பள்ளிக்கு ரூ.2.50 லட்சம் மதிப்புள்ள கல்வி உபகரணங்கள், ஆர்.ஓ. பிளாண்ட்,கல்வி உபகரணங்கள், பள்ளிக்கு கழிப்பறையை புதுப்பிக்க நிதிஉதவி ஆகியவற்றை வழங்கினார்.

விழாவில் வானாபாடி ஊராட்சி மன்றத் தலைவர் அர்ச்சுணன், பள்ளி தலைமை ஆசிரியர் பாச்சா சங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை நிறுவன பாதுகாப்பு மேலாளர் ரவி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**சுற்றுச்சுழல் தினம்: மரக்கன்று நட்ட நீதிபதிகள்**

உலக சுற்றுச்சுழல் தினத்தை முன்னிட்டு தருமபுரியில் நீதிபதிகள் மரக்கன்றுகளை வெள்ளிக்கிழமை நட்டனர். தடங்கத்தில் மாற்றுமுறை தீர்வு மைய நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி ஆர்.செல்வக்குமார், சிறப்பு நீதிபதி ஏ.கே.ஏ.ரகுமான், மாவட்ட கூடுதல் நீதிபதி ஆர்.லதா, மகளிர் நீதிமன்ற நீதிபதி எம்.மீரா சுமதி, தலைமை குற்றவியல் நீதிபதி ஆர்.ஸ்ரீதர் ஆகியோர் 15 மரக்கன்றுகளை நட்டனர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர்கள், தருமபுரி வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் அப்புனு கவுண்டர், செயலர் கோவிந்தராஜ் மற்றும் வழக்குரைஞர்கள் கலந்து கொண்டனர்.

**முட்டை விலை ரூ.4 வரை அதிகரிக்க வாய்ப்பு**

நாமக்கல் மண்டலத்தில் பண்ணைக் கொள்முதல் முட்டை விலை ரூ.4 வரை உயர வாய்ப்புள்ளது என தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டலத் தலைவர் பி.செல்வராஜ் தெரிவித்தார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: நடப்பாண்டு கோடையின் தாக்கம் மிக அதிக அளவில் இருந்ததால், முட்டை உற்பத்தியில் இந்தியாவின் பெரிய மாநிலங்களான ஆந்திரம் மற்றும் தெலங்கானாவில் லட்சக்கணக்கான முட்டையினக் கோழிகள் இறந்தன. இதனால், சுமார் 25 சதவிகிதம் அளவுக்கு முட்டை உற்பத்தி பாதித்தது.

மேலும், குறைந்த முட்டை உற்பத்தி காரணமாக ஹைதராபாத், விஜயவாடா, மேற்கு கோதாவரி உள்ளிட்ட ஆந்திர மற்றும் தெலங்கானா உற்பத்தி மையங்களில் முட்டை பற்றாக்குறையாக உள்ளதால், அப் பகுதிகளில் என்இசிசி விலை உயர்ந்து வருகிறது.

நாமக்கல் மண்டலத்தின் முக்கிய விற்பனை மையமான கேரள மாநிலத்தில், ஜூன் 1-ஆம் தேதி முதல் மீன் பிடி தடைக் காலம் அமலுக்கு வந்துள்ளதைத் தொடர்ந்து, முட்டைக்கான தேவை அதிகரித்துள்ளது.

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்டு, சத்துணவுத் திட்டத்துக்கு முட்டைகள் அனுப்பப்படுவதால், முட்டைக்கான தேவை அதிகரித்துள்ளது.

மேலும், தமிழகத்தில் காய்கறிகள் விலை உயர்வு காரணமாக முட்டைக்கான தேவை அதிகரித்துள்ளது. கடந்த ஓராண்டு காலமாக கோழிப்பண்ணைத் தொழிலில் பெரும் இழப்பு காரணமாக பண்ணைகளில் குஞ்சு விடுவது ஓரளவு குறைந்துள்ளதாலும், முட்டை உற்பத்தி குறைந்துள்ளது. இந்த காரணங்களினால், நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. விரைவில் ரூ.4 வரை முட்டை விலை உயர வாய்ப்புள்ளது. முட்டை விலை தொடர்ந்து உயர்ந்துவரும் சூழ்நிலையில், பண்ணையாளர்கள் ஏற்றுமதி முட்டைகளை 10 பைசா மட்டுமே குறைத்து விற்க வேண்டும். முட்டைக்கான தேவை அதிகம் உள்ள சூழ்நிலையில், குறைந்த விலைக்கு ஏற்றுமதி முட்டைகளை விற்கத் தேவையில்லை என்றார்.

**கிருஷ்ணகிரி அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

கிருஷ்ணகிரி அணைக்கான நீர் வரத்தானது வெள்ளிக்கிழமை 652 கன அடியாக அதிகரித்தது. கர்நாடக மாநிலம், நந்தி மலை, பெங்களூரு மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்று நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கிருஷ்ணகிரி அணையின் மொத்த கொள்ளளவான 52 அடியில் தற்போது 51 அடியை எட்டியுள்ளது. கடந்த சில நாள்களாக நீர்வரத்து படிப்படியாக உயர்ந்துவரும் நிலையில், அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை நிலவரப்படி அணையின் நீர்வரத்து விநாடிக்கு 652 கன அடியாக உயர்ந்தது.

அணையின் பாதுகாப்புக் கருதி விநாடிக்கு 652 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. இந்த நிலையில், கெலவரப்பள்ளி அணையிலிருந்து தென்பெண்ணை ஆற்றில் விநாடிக்கு 500 கன

அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்தால், பிரதான மதகுகளில் இருந்து நீர் வெளியேற்றப்படும் என பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

**சேலம் மாவட்டத்தில் உலகச் சுற்றுச்சூழல் தின விழா**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட கன்னந்தேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உலகச் சுற்றுச்சூழல் தின விழா பள்ளி வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பள்ளித் தலைமை ஆசிரியர் க.சந்திரசேகர் தலைமை வகித்து சுற்றுப்புறத் தூய்மையின் முக்கியத்துவம் குறித்து விளக்கிப் பேசினார்.

தேசியப் பசுமைப் படை ஒருங்கிணைப்பாளர் ஆர்.ஜெயக்குமார் வரவேற்றார்.

சுற்றுச்சூழல் குறித்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. ஓவியப் போட்டியில் 8-ஆம் வகுப்பு மாணவர்கள் கு.ஷியாம், சந்தோஷ், ஸ்ரீகாயத்திரி, சு.பாலசுப்பிரமணியம் ஆகியோர் வெற்றி பெற்றனர். போட்டியில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ஆசிரியர்கள் அமலோற்பவமேரி, சோபியா, சங்கீதா, வீ.பாலன் ஆகியோர் பரிசுகளை வழங்கினர். பள்ளி மாணவ, மாணவிகள் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டனர். ஆத்தூரில்

ஆத்தூரை அடுத்த தளவாய்ப்பட்டி ஊராட்சி நடுநிலைப் பள்ளி சார்பில் நடைபெற்ற உலகச் சுற்றுச்சூழல் தினப் பேரணியை தலைமை ஆசிரியர் ஆர்.தனலட்சுமி தொடக்கி வைத்தார். இந்தப் பேரணியில் பள்ளி மாணவ, மாணவிகள் சைக்கிள் பயன்பாட்டை அதிகப்படுத்துதல், மரம் வளர்த்தல், மின்சாரம், தண்ணீர் சிக்கனம், பாலித்தீன் பைகளை கைவிட்டு துணிப்பைகளை பயன்படுத்துதல் போன்ற விவரங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாகச் சென்றனர்.

இந்தப் பேரணியில் ஆசிரியர் பி.ராஜாங்கம், தி.குமார், க.ராஜேஸ்வரி, சி.கண்மனி, இரா.அமிர்தம், இரா.அன்னக்கிளி, மாணவ, மாணவிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

**தேசிய பசுமைப்படை சார்பில் உலக சூற்றுச்சூழல் தினம்**

அரியலூர் மாவட்ட தேசிய பசுமைப்படை மற்றும் சூற்றுச்சூழல் மன்றங்களின் சார்பில், சுற்றுச்சூழல் தின விழா வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியை முன்னிட்டு, எழுநூறுகோடி கனவுகள் - ஒரே ஒரு பூமி - அதை கவனமாக பயன்படுத்துவோம் (நங்ஸ்ங்ய் ஆண்ப்ப்ண்ர்ய் ஈழ்ங்ஹம்ள் ஞய்ங் டப்ஹய்ங்ற் இர்ய்ள்ன்ம்ங் ரண்ற்ட் இஹழ்ங்) என்ற ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் செயல்திட்ட

குழுவின் மையக் கருத்தை வலியுறுத்தி, அரியலூர் மான்ட்போர்ட் மெட்ரிக் பள்ளி தேசிய பசுமைப்படை மாணவ, மாணவிகளின் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகள் சுற்றுச்சூழலை பாதுகாப்போம், மரம் நடுவோம், மழை பெறுவோம், பிளாஸ்டிக் பொருள்களை தவிர்ப்போம், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்வோம் போன்ற கோஷங்களை எழுப்பியவாறு பள்ளியில் இருந்து புறப்பட்டு அண்ணாநகர், கல்லூரி சாலை வழியாகச் சென்று மீண்டும் பள்ளியை வந்தடைந்தனர்.

முன்னதாக பேரணியை, மாவட்ட பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்கள் அல்லி, சி. ராஜேந்திரன் சுற்றுச்சூழல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மு. அறிவழகன் ஆகியோர் தொடக்கி வைத்தனர். பசுமைப்படை ஆசிரியர் ராஜேந்திரன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**குறுவை தொகுப்பு உதவி திட்டத்துக்கு மூ.மு.க. பாராட்டு**

காவிரி டெல்டா விவசாயிகளுக்காக குறுவை தொகுப்பு உதவித் திட்டத்தை அறிவித்த தமிழக முதல்வருக்கு அகில இந்திய மூவேந்தர் முன்னணிக் கழகம் பாராட்டு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அக்கழகத்தின் நிறுவனர் தலைவர் ந. சேதுராமன் தெரிவித்திருப்பது: மழை பொய்த்துப் போனாலும், காவிரியில் நீர் திறக்க கர்நாடகம் மறுத்தாலும் காவிரி விவசாயிகளுக்காக 5 செயல் திட்டங்களைத் தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கியதுபோல மும்முனை மின்சாரம், நவீன நடவு இயந்திரங்கள் எவ்வித கட்டணமின்றி வழங்குதல், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 315 உதவித்தொகை, இலவச மண் பரிசோதனை, மண் வளம் மேம்படுத்த இலவச ஜிப்சம், குறுகிய காலப் பயிர்கள் விவசாயம் செய்ய வழிகாட்டுதல் என நவீன முறையில் விவசாயம் செய்ய வழிகாட்டியுள்ளார் முதல்வர். விவசாயத்துக்கான மண் வளப்

பாதுகாப்புக்குச் செயல்படுத்தப்படும் திட்டங்கள் இன்றைக்கு மட்டுமல்ல, எதிர்காலத்திலும் பயனளிக்கும் அற்புதமான காமதேனு திட்டம் என்பதை காலம் உலகிற்கு உணர்த்தும்.

**"சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்**

சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்த வேண்டும் என்றார் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கே. ஜோஷி நிர்மல்குமார்.

தமிழ்நாடு வனத்துறை, கரூர் சைக்கோ அறக்கட்டளை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் "உலக சுற்றுச்சூழல் தினம்' ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியது:

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒரே அணியில் திரள வேண்டும். மேலும், பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் மாசுபட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து விளக்க வேண்டும். ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ஒரு மரக்கன்றையாவது நட்டு வளர்க்க முன்வர வேண்டும் என்றார். முன்னதாக, சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் ஆட்சியர் ச. ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து, பொதுமக்களுக்கு மரக்கன்று மற்றும் விதைகள் வழங்கும் நிகழ்ச்சியை ஆட்சியர் தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கிளாரட் சமுதாயக் கல்லூரியின் இயக்குநர் பிலோராணி வரவேற்றார். தொடர்ந்து, சைக்கோ அறக்கட்டளை இயக்குநர் ஜே. கிறிஸ்துராஜ் சுற்றுச்சூழல் மாசடைவது மற்றும் அதைத் தடுப்பது குறித்தும் விளக்கினார்.

தொடர்ந்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுற்றுச்சூழல் குறித்த உறுதிமொழியை வாசிக்க, பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் வனத்துறையினர் அதை ஏற்றனர். தொடர்ந்து, மாவட்ட அளவிலான

விழிப்புணர்வு சைக்கிள் பிரசாரத்தை அவர் தொடக்கி வைத்தார். முக்கிய வீதிகள் வழியாகச் சென்று இறுதியில் பிரசாரக் குழுவினர் கரூர் தபால் நிலையம் வந்தடைந்தனர். இந்நிகழ்ச்சியில் வனத்துறை கோட்ட அலுவலர் என். அப்புசாமி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் புஷ்பராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**துவங்கியது தென்மேற்கு பருவ மழை:தமிழகத்தில் மழை எச்சரிக்கை**

சென்னை:'தென்மேற்கு பருவமழை கேரளத் தில் துவங்கியது' என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.தென்மேற்கு பருவமழை ஆண்டுதோறும் ஜூன் 1ம் தேதி துவங்கும். நடப்பாண்டில் ஜூன் 5ம் தேதியான நேற்று தான் துவங்கி உள்ளது.நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவ மழை நாடு முழுவதும் பற்றாக்குறையாக இருக்கும் என கணிக்கப்பட்டு உள்ளது. தமிழகம், புதுச்சேரி கேரளாவை உள்ளடக்கிய தெற்கு தீபகற்பத்தில் சராசரியான 90 சதவீதத்தை தென்மேற்கு பருவமழை எட்டும், என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பருவமழை துவங்கியது குறித்து வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட அறிக்கை: கேரளாவில் தென்மேற்கு பருவமழை துவங்கியுள்ளது. அங்கு கடந்த 48 மணி நேரமாக பரவலாக மழை பெய்து வருகிறது.

அங்குள்ள மழை அளவு கணக்கிடும் 14 மையங்களில் 70 சதவீத மையங்கள் 2.5 செ.மீ., மழை தொடர்ந்து பதிவாகி உள்ளதாகத் தெரிவிக்கின்றன.தென்மேற்கு திசையை நோக்கி மணிக்கு 40 - 50 கி.மீ., வேகத்தில் அரபிக் கடலில் இருந்து காற்று வீசத் துவங்கி உள்ளது. இந்த காற்று அழுத்தம் பெற்று லட்சத்தீவு, கேரளா, கடலோர கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டை அடையும். எனவே அடுத்த 48 மணி நேரத்தில் தமிழகத்திலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இவ்வாறு

அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**பூச்சிக்கொல்லி மருந்தை தவிர்க்கலாம் வாங்க:தக்காளியில் அறிமுகம்**




காந்திகிராமம்:தக்காளி சாகுபடியில் பூச்சிக்கொல்லி மருந்தை தவிர்க்கும் புதிய தொழில் நுட்பத்தை காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையம் அறிமுகப்படுத்தியது.திண்டுக்கல் மாவட்டத்தில் 5 ஆயிரம் ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. ஏக்கருக்கு சாதாரண முறையில் 25 டன், இஸ்ரேல் தொழில்நுட்ப முறையில் 30 டன் சராசரியாக மகசூல் கிடைக்க வேண்டும். இதில் பூச்சித் தாக்குதலால் மகசூலில் 10 சதவீதம் வரை இழப்பு ஏற்படுகிறது. இதற்காக விவசாயிகள் அதிகளவில் பூச்சிக்கொல்லி மருந்தை பயன்படுத்துகின்றனர்.இதனால்

நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படுகிறது. பூச்சிக்கொல்லி மருந்தை தவிர்க்க, புதிய தொழில்நுட்பத்தை காந்திகிராம வேளாண் அறிவியல் மையம் அறிமுகப்படுத்தியது.

இதில் தக்காளி பயிர்களுக்கு இடையில் செண்டுமல்லியும், நிலத்தை சுற்றிலும் வயல் ஓரங்களில் மக்காளச்சோளமும் பயிரிட வேண்டும். செண்டு மல்லி காய்ப்புழுக்களையும், மக்காச்சோளம் சாறு உறிஞ்சும் பூச்சிகளையும் கட்டுப்படுத்தும். இதனால் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க தேவையில்லை.அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார் கூறியதாவது: புதிய தொழில்நுட்பத்தை பெங்களூரு தோடக்ககலை ஆராய்ச்சி மையம் கண்டுபிடித்துள்ளது. தக்காளி சாகுபடியில் 16 பாத்திகளுக்கு, ஒரு பாத்தி செண்டு மல்லி நட வேண்டும். பூச்சிகளை தடுக்க செலவு குறைந்த பயிர்களை தேர்வு செய்ய வேண்டும். புதிய தொழில் நுட்பம் குறித்து விவசாயிகள் அறிந்து கொள்ள எங்கள் பண்ணையில் செயல்விளக்க திடல் அமைத்துள்ளோம், என்றார்.

**'களிறு திட்டம்' அமல்படுத்துவதில் வனத்துறை தீவிரம்; பயிருக்கும், உயிருக்கும் பாதுகாப்பு கிடைக்குமா?**

கோவை : கோவை வனக்கோட்டத்தில் மனித - விலங்கு மோதலுக்கு நிரந்தர தீர்வு காண தயாரிக்கப்பட்ட களிறு திட்டத்தை அமல்படுத்த, வனத்துறையினர் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கோவை வனக்கோட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில், மனித - விலங்கு மோதல் காரணமாக, ஆண்டுக்கு 30க்கும் அதிகமான மனித உயிர்களை இழந்து வருகிறோம். இந்நிலை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டே வருவதால், மனித-விலங்கு மோதலுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என விவசாயிகள், சமூக ஆர்வலர்கள், தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.வன விலங்குகள் ஊருக்குள் வருகிறது

என்றால், வனத்தில் அவற்றுக்கான தீவனப்பற்றாக்குறை மற்றும் வன எல்லையில் உள்ள அனுமதியற்ற கட்டடங்களுமே காரணம். அனுமதியற்ற கட்டடங்களின் மேல், வனத்துறை சார்பில் தனியாக நடவடிக்கை எடுக்க முடியாது. மனித-விலங்கு மோதலால் ஏற்படும் உயிரிழப்புகளை முற்றிலும் குறைக்க, 'களிறு' திட்டம் வனத்துறையால் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின்பிடி, விவசாயிகள், கிராம மக்கள், மற்றும் அனைத்து அரசு துறைகளையும் ஒன்றிணைத்து, இப்பிரச்னைக்கு தீர்வு காண முடிவு செய்துள்ளனர்.இத்திட்டத்தை அமல்படுத்துவதன் முதல் கட்டமாக, கடந்த 26ம் தேதி விவசாயிகளுடனான கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. கூட்டத்தில்,'இரவு நேரத்தில் வன எல்லையில் உள்ள தோட்டத்துக்கு செல்வதை விவசாயிகள் தவிர்க்க வேண்டும்' என வனத்துறையினர் அறிவுறுத்தினர்.தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக, அனைத்து அரசு துறை அதிகாரிகளுடனான கூட்டம் நடத்தவுள்ளனர். இக்கூட்டம் இம்மாத இறுதிக்குள் நடத்தப்படவுள்ளதாக வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி**

திருவள்ளூர்:உலக சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி, திருவள்ளூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.திருவள்ளூர் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில், 16 ஏக்கர் பரப்பளவில், ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டப்பட்டு, கடந்த வாரம் திறக்கப்பட்டது. திறப்பு விழாவின் போது பேசிய, ஆட்சியர் வீர ராகவ ராவ், நீதிமன்ற வளாகம் முழுவதும் மரக்கன்றுகள் நட்டு, பசுமை வளாகமாக்கப்படும் என, அறிவித்தார்.இதன்படி, உலக சுற்றுச்சூழல் தினமான நேற்று, நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட முதன்மை நீதிபதி ஜெயச்சந்திரன், காவல் கண்காணிப்பாளர் சாம்சன், வன அலுவலர் முகமது சகாப் ஆகியோர்

மரக்கன்றுகளை நட்டனர். தொடர்ந்து, நீதிமன்ற வளாகம் முழுவதும் மரக்கன்றுகள் நடப்பட உள்ளது.

## ஏலசெடிகளில் அழுகல் நோய்கட்டுப்படுத்த ஆலோசனை

கம்பம்:ஏலச்செடிகளை அழுகல் நோயிலிருந்து காக்க ஏலக்காய் சாகுபடி தொழில்நுட்ப ஆலோசகர்கள் அன்பழகன், பாண்டியராஜன் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அவர்கள் கூறியதாவது: இடுக்கி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை துவங்குவதற்கான அறிகுறிகள் தெரியத் துவங்கியுள்ளன. வானிலை ஆராய்ச்சி நிலையங்களும் உறுதி செய்துள்ளன. ஏற்கெனவே பெய்த மழையால் அழுகல் தாக்கியுள்ளது. இந்நிலையில் தென்மேற்கு பருவமழை துவங்கினால் அழுகல் தீவிரமாகும். எனவே இப்போதே அலியேட் மருந்து வாங்கி தெளிக்கலாம். ஒரு ஏக்கருக்கு 1.5 கிலோ தேவைப்படும். 300 லிட்டர் முதல் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். எந்த மருந்துடனும் கலந்து தெளிக்கலாம். ஏலச்சரம் மற்றும் காய்களில் மட்டும் தெளிக்கலாம். மிக முக்கியமாக அழுகலை ஏற்படுத்த காரணமாக மண்ணில் வசிக்கும் பித்தியம் மற்றும் பைட்டோப்தோரா பூஞ்சானத்திற்கு எதிராக ஸ்பைசஸ் போர்டு, ஏல ஆராய்ச்சி நிலையங்களால் அழுகல் நோய்க்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஒரே மருந்து இது தான். முற்றிலும் ஊடுருவி செயல்படக் கூடியது. மருந்தின் அம்சம் மழையினால் கரைந்து வீணாகாது. அலியேட் மருந்தை தெளித்து அழுகல் நோய் தாக்காமல் இருக்க விவசாயிகள் முன்வர வேண்டும், என்றனர்.

## ஆர்.எஸ்.மங்கலத்தில் பலத்த மழை

ஆர்.எஸ்.மங்கலம்:ஆர்.எஸ்.மங்கலத்தில் நேற்று மாலை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாலை 4.15 மணிக்கு லேசான தூறல்

மழைஆரம்பித்தது. பின்னர் பலத்த மழை கொட்டியது. ஆர்.எஸ்.மங்கலம், சனவேலி, செங்குடி,சோழந்தூர் உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளிலும் மழைபெய்தது. இதனால் வெப்பம் குறைந்து மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**காரைக்குடியில் இடியுடன் மழை**

காரைக்குடி:காரைக்குடியில் நேற்று மாலை 4.05 மணி முதல் 5.30 மணி வரை, இடியுடன் பலத்த மழை பெய்தது. ரோடுகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டது. காற்றுடன் கூடிய மழை பெய்தததால் மரம் சாய்ந்தது.கடந்த சில நாட்களாக சுட்டெரிக்கும் வெயிலால் தகித்து வந்த மக்களுக்கு, இதமளிக்கும் வகையில் நேற்று மாலை 4.05 மணி முதல் 5.30 மணி வரை காரைக்குடி செட்டிநாடு, பள்ளத்தூர், சாக்கோட்டை பகுதியில் இடி மின்னலுடன் மழை பெய்தது. காற்றில் மரம் வேரோடு சாய்ந்தது. தாலுகா அலுவலகம் எதிரே, உள்ள பழமையான மரம் வேரோடு சாய்ந்தது. மரம் விழுந்ததில் இரண்டு டூவீலர் மரத்தின் அடியில் சிக்கி நொறுங்கியது. காரைக்குடி மேல ஊரணி வாய்க்கால் தெருவில், மழைநீர் செல்லும் கால்வாயை ஒரு சிலர் ஆக்கிரமித்ததால், கழிவு நீர் மட்டுமன்றி, மழை நீரும் செல்ல வழியின்றி, அங்குள்ள வீடு, தொழில் நிறுவனங்களில் புகுந்தது. கழிவு நீர் கால்வாய் தூர்வாரப்படாததால், மழைநீர் ரோட்டில் ஓடியது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**தென்மேற்கு பருவமழை கேரளாவில் தொடங்கியது**



புதுடெல்லி,

கேரளாவில் நேற்று தென்மேற்கு பருவமழை தொடங்கியதாக இந்திய வானிலை மையம் அறிவித்து உள்ளது.

4 நாட்கள் தாமதம்

தென்மேற்கு பருவமழை ஆண்டுதோறும் ஜூன் மாதம் 1-ந் தேதி வாக்கில் தொடங்குவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டுக்கான பருவமழை தொடங்குவதில் கடந்த 4 நாட்களாக தாமதம் ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில் வழக்கமான நாளில் இருந்து 4 நாட்கள் தாமதமாக, நேற்று பருவமழை தொடங்கியது. அதன்படி கேரளாவின் பல்வேறு இடங்களில் பரவலாக தென்மேற்கு பருவமழை பெய்திருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மழை நீடிக்கும் : இந்த மழை தெற்கு அரபிக்கடல் பகுதி, மத்திய அரபிக்கடலின் சில பகுதிகள், லட்சத்தீவுகள் மற்றும் கேரளாவில் தொடர்ந்து நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்து உள்ளது. மேலும் கடலோர மற்றும் தெற்கு உள் கர்நாடகா, தமிழ்நாடு, தென்கிழக்கு வங்காள விரிகுடாவின் மீதமுள்ள பகுதிகள், மத்திய மற்றும் வடகிழக்கு வங்காள விரிகுடாவின் சில பகுதிகளிலும் இந்த மழை பெய்யும். இதைப்போல கர்நாடகாவின் சில பகுதிகள், தமிழ்நாடு, ராயலசீமா, கடலோர ஆந்திராவின் சில பகுதிகள் மற்றும் வடகிழக்கு இந்தியாவில் அடுத்த 48 மணி நேரத்துக்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

கனமழை எச்சரிக்கை

இதற்கிடையே கேரளா மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்து உள்ளது. அதன்படி கேரளா மற்றும் லட்சத்தீவின் சில பகுதிகளில் இன்று காலை வரை சுமார் 7 செ.மீ. வரை மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. மேலும் கேரள கடலோர பகுதிகள் மற்றும் லட்சத்தீவுகளில், நேற்று மதியம் 2 மணியுடன் தொடங்கிய 24 மணி நேரத்தில், மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வரை பலத்த காற்று மேற்கு நோக்கி வீசக்கூடும் எனவும் வானிலை மையம் எச்சரித்து இருக்கிறது.

**தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு**

இந்த நிலையில் மழை மறைவு பிரதேசமான தமிழகத்திலும் ஓரிரு இடங்களில் மழை பெய்திருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தின் உள்மாவட்டங்களின் ஒரு சில இடங்களிலும், கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையிலும் ஓரிரு இடங்களில் மழை

பெய்ய வாய்ப்பு உள்ளது. மழை அளவு தமிழகத்தில் தென்மேற்கு பருவமழையால் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்கள் அதிக அளவில் பயன்பெறும். குறிப்பாக கோவை மாவட்டம் ஆண்டுதோறும் பெறும் மழையில் 50 சதவீதத்தை தென்மேற்கு பருவமழை காலங்களில் தான் பெறும். நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் சேலத்தில் 7 செ.மீ., மதுரை விமான நிலையத்தில் 5 செ.மீ., ஓமலூர் காங்கேயத்தில் 4 செ.மீ., திண்டுக்கல் மற்றும் கோபிச்செட்டிப்பாளையத்தில் தலா 3 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் கூறினார்.

**பருவ மழை போதுமானதாக இல்லாவிட்டால் விவசாயிகளுக்கு மின்சாரம், விதைகளுக்கு மானியம் மத்திய அரசு அறிவிப்பு**




புதுடெல்லி,

பருவ மழை போதுமானதாக இல்லாவிட்டால், விவசாயிகளுக்கு மின்சாரம், விதைகளுக்கு மானியம் வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

<u>பருவ மழை குறையும்</u>

இந்த ஆண்டு பருவ மழை குறைவாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு துறை கணித்துள்ளது. நாட்டில் 88 சதவீத பருவ மழைதான் பெய்யும் என அது கூறி உள்ளது. அதிலும் வட மேற்கு இந்திய மாநிலங்கள் வறட்சிக்கு ஆளாகும் என தெரிய வந்துள்ளது.

பருவமழை குறைவாகத்தான் பெய்யும் என்பதால் உணவு தானிய உற்பத்தியிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தும். பருவமழை போதுமான அளவுக்கு பெய்யாமல் போகிறபோது அது விவசாயிகளுக்கு கடும் துயரத்தை ஏற்படுத்தும்.

<u>ஆலோசனை கூட்டம்</u>

இந்த நிலையில், மத்திய விவசாயத்துறை மந்திரி ராதா மோகன் சிங், டெல்லியில் நேற்று இந்திய வானிலை ஆய்வு துறை உயர் அதிகாரிகளின் கூட்டத்தை கூட்டி ஆலோசனை நடத்தினார்.

இந்த கூட்டத்தில் எரிசக்தி, நீர்வளம், ஊரக வளர்ச்சி, உணவு மற்றும் உரத்துறை அமைச்சகங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள்.

<u>மானியம்</u>

இந்த கூட்டத்துக்கு பின்னர் மத்திய அரசின் சார்பில், விவசாயத்துறை மந்திரி ராதா மோகன் சிங், நிருபர்களிடம் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

பருவமழை குறைந்து வறட்சி நிலைமை ஏற்பட்டால், கடந்த ஆண்டைப்போல விவசாயிகளுக்கு டீசல், மின்சாரம், விதைகளுக்கு மானியம் வழங்குவோம்.

வறட்சி நிலைமையை எதிர்கொள்ள அரசு முழுமையாக தயார் நிலையில் உள்ளது. பருவ மழை பற்றாக்குறையை சமாளிப்பதற்கு ஒவ்வொரு துறையிலும் ஒரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>மானியம் எவ்வளவு?</u>

கடந்த ஆண்டைப்போலவே டீசலுக்கு லிட்டருக்கு ரூ.10 மானியம், இந்த ஆண்டும் தொடரும் என அதிகார வட்டாரங்கள் கூறுகின்றன. இதே போன்று விதை மானியம், பல்வேறு திட்டங்கள் மூலமாக 50 சதவீதம் வழங்கப்படலாம்; நீர்ப்பாசனத்துக்காக விவசாயிகளுக்கு இலவச மின்சாரமும் வழங்கப்படும் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

விவசாயிகளின் நலனைப் பேணுகிற வகையில் இந்த ஆண்டு புதிய பயிர் காப்பீட்டு திட்டமும் அமல்படுத்தப்படும்.

உள்நாட்டு சப்ளையை மேம்படுத்தவும், விலை உயர்வை கட்டுப்படுத்தவும் பருப்பு வகைகளை மத்திய அரசு இறக்குமதி செய்யும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

**கோவை வர்த்தக மையத்தில் ரூ.2 கோடியே 47 லட்சத்துக்கு தேயிலைத்தூள் ஏலம்**




கோவை வர்த்தக மையத்தில் ரூ.2 கோடியே 47 லட்சத்துக்கு தேயிலைத்தூள் ஏலம் போனது.

தேயிலைத்தூள் ஏலம்

கோவையில் உள்ள தேயிலை வர்த்தக மையத்தில் வாரந்தோறும் இணையதளம் மூலம் தேயிலைத்தூள் ஏலம் விடப்படுகிறது. இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஏலதாரர்கள் தேயிலைத்தூள் ரகங்களை ஏலத்தில் எடுத்து வருகிறார்கள். இதன்படி நடைபெற்ற 23-வது ஏலத்தின் விவரம் வருமாறு:-

3 லட்சத்து 56 ஆயிரத்து 315 கிலோ தேயிலைத்தூள் ஏலத்துக்கு வந்தது. அதில் 2 லட்சத்து 33 ஆயிரத்து 50 கிலோ தேயிலைத்தூள் ஏலம் போனது. இது 65 சதவீதம் ஆகும். 1 லட்சத்து 23 ஆயிரத்து 265 கிலோ தேயிலைத்தூள் தேக்கம் அடைந்து உள்ளது. ஒரு கிலோ தேயிலைத்தூளின் சராசரி ஏல மதிப்பு 72 ரூபாய் 26 காசு. இது கடந்த வாரம் 73 ரூபாய் 14 காசாக இருந்தது. தேயிலைத்தூள் ரகத்தின் ஏல மதிப்பு ரூ.1 கோடியே 68 லட்சத்து 40 ஆயிரத்து 193 ஆகும். ரூ.2 கோடியே 47 லட்சம்

இலைரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 85 ஆயிரத்து 719 கிலோ ஏலத்திற்கு வந்தது. அதில் 1 லட்சத்து 17 ஆயிரத்து 728 கிலோ ஏலம் போனது. இது 63 சதவீதம் ஆகும். 67 ஆயிரத்து 728 கிலோ தேக்கம் அடைந்து உள்ளது. ஒரு கிலோ இலைரக தேயிலையின் சராசரி ஏல மதிப்பு 67 ரூபாய் 61 காசு ஆகும். இது கடந்த வாரம் 65 ரூபாய் 91 காசாக இருந்தது. இதன் மொத்த விற்பனை மதிப்பு ரூ.79 லட்சத்து 59 ஆயிரத்து 590 ஆகும்.

இந்த ஏலத்தில் 3 லட்சத்து 50 ஆயிரத்து 778 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலை ரக தேயிலை விற்பனை ஆகி உள்ளது. 1 லட்சத்து 91 ஆயிரத்து 256 கிலோ தேக்கம் அடைந்துள்ளது. இந்த ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.2 கோடியே 47 லட்சத்து 99 ஆயிரத்து 783 ஆகும்.

இந்த தகவலை கோவை தேயிலை விற்பனை மைய (போர்ப்ஸ்) மேலாளர் எம்.பிரபாகரன் தெரிவித்து உள்ளார்.

**தேயிலை விவசாயிகளுக்கு மானிய விலையில் நாற்றுக்கள் தோட்டக்கலை இணை இயக்குனர் தகவல்**




தேயிலை விவசாயிகளுக்கு மானிய விலையில் நாற்றுக்கள் வழங்கப்படுவதாக தோட்டக்கலை இணை இயக்குனர் மணி தெரிவித்து உள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தேயிலை விவசாயம் : நீலகிரி மாவட்டத்தில் முக்கிய விவசாய தொழிலாக தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள சுமார் 60 ஆயிரம் தேயிலை சிறுவிவசாயிகள் தங்கள் தோட்டங்களில் தேயிலை செடிகளை நடவு செய்து தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். விவசாயிகளின் தோட்டங்களில் இருந்து அறுவடை செய்யப்படும் பச்சை தேயிலையே தேயிலை தூள் உற்பத்திக்கு மூலப்பொருளாக உள்ளது. இந்த நிலையில் தேயிலை விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறையின் மூலமாக பல்வேறு மானிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி புதிய தேயிலை தோட்டம் அமைப்பதற்கும், தேயிலை தோட்டங்களில் இடைநடவு செய்வதற்கும் தோட்டக்கலை துறையின் மூலம் தேயிலை நாற்றுக்கள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலை யில் வழங்கப்பட உள்ளன.

**மானிய விலையில் நாற்றுக்கள்**

இந்த தேயிலை நாற்றுகள் 2 ரூபாய் மானிய விலையில் வழங்க திட்டமிடப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், தரமான தேயிலை நாற்றுகள் அரசு தோட்டக்கலை பண்ணை, தும்மனட்டி, தொட்ட பெட்டா, நஞ்சநாடு, கோல்கிரைன், குன்னூர் பழவியல் நிலையம், தேவாலா மற்றும் காட்டேரியில் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது.

எனவே மானிய விலையில் தேயிலை நாற்றுக்கள் பெற விருப்பம் உள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் சேரிங்கிராஸ் பகுதியில் உள்ள தோட்டக்கலை தகவல் மையத்தினை தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தேயிலை நாற்றுக்களை 50 சதவீத மானியத்தில் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

கும்பகோணத்தில் வெள்ளரி விற்பனை அமோகம்



கும்பகோணம் பகுதியில் வெள்ளரி விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

வெள்ளரி பிஞ்சு : கும்பகோணம் பகுதிக்கு உள்பட்ட சுவாமிமலை, திருவலஞ்சுழி, பட்டீஸ்வரம், மாங்குடி போன்ற பகுதிகளில் வெள்ளரி சாகுபடியில் விவசாயிகள் பலர் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வெள்ளரி பிஞ்சுகளுக்கு கோடை காலத்தில் நல்ல வரவேற்பு இருப்பதாலும், தகுந்த விலை கிடைப்பதாலும் அந்த சமயத்தில் அறுவடை செய்யும் வகையில் இந்த வெள்ளரி பிஞ்சுகளை விவசா யிகள் சாகுபடி செய்கின்றனர். கோடை காலத்தில் இந்த வெள்ளரி பிஞ்சுகள் அறுவடை செய்யப் படுகின்றன. பின்னர் அந்த வெள்ளரி பிஞ்சுகள் தரம் பிரிக்கப் பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. இந்த வெள்ளரி பிஞ்சுகள் சிறிய பிஞ்சுகளாக இருந்தால் 4 முதல் 5 வரையும், பெரிய பிஞ்சுகளாக இருந்தால் 3-ம் கொண்ட சிறுசிறு கட்டுகளாக கட்டப்பட்டு ரூ.10க்கு விற்பனை செய்யப்படுகிறது. விற்பனை அமோகம் கும்பகோணம் பஸ் நிலையம், ரெயில் நிலையம் மற்றும் சுற்றியுள்ள பல்வேறு இடங்களில் இந்த வெள்ளரி பிஞ்சுகள் விற்பனை அமோகமாக நடக்கின்றன. இந்த வியா பாரத்தில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். ஒருசிலர் சைக்கிளில் வைத்துக் கொண்டு

தெருத்தெருவாக விற்கின்றனர். இந்த வெள்ளரி பிஞ்சுகள் வெயில் காலத்தில் ஏற்படும் உடல் உஷ்ணத்தை குறைத்து குளிர்ச்சி தரும் மருத்துவகுணம் கொண்டது மற்றும் 95 சதவீதம் நீர்ச்சத்து நிறைந்தது என்பதால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி வாங்கிச்செல்கின்றனர். இதில் விவசாயிகளுக்கும், வியாபாரி களுக்கும் நாள்ஒன்றுக்கு நல்ல வருமானம் கிடைப்பதால் இந்த விற்பனையில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

**ஆந்திராவில் இருந்து தஞ்சைக்கு 1,310 டன் யூரியா உரம் சரக்குரெயிலில் கொண்டு வரப்பட்டது**



தஞ்சைக்கு வந்த உர மூட்டைகளை தொழிலாளர்கள் லாரிகளில் ஏற்றிய போது எடுத்த படம்.

ஆந்திராவில் இருந்து தஞ்சைக்கு 1,310 டன் யூரியா உரம் சரக்குரெயிலில் கொண்டு வரப்பட்டது. யூரியா உரம் தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நெல் சாகுபடி நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி ஆழ்குழாய் கிணறு மூலம் நடைபெற்று வருகிறது. இந்த நெல் சாகுபடிக்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மை

கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உர விற்பனை கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தேவைக்கு ஏற்ப வெளிமாநிலங்களில் இருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும் உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி தஞ்சை மாவட்டத்திற்கு தேவையான யூரியா உர மூட்டைகள் ஆந்திர மாநிலம் காக்கிநாடா துறைமுகத்தில் இருந்து சரக்கு ரெயில் மூலம் தஞ்சை ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,310 டன் யூரியா உரம் வந்திருந்தது. பின்னர் இந்த உர மூட்டைகள் சரக்குரெயிலில் இருந்து லாரியில் தொழிலாளர்கள் ஏற்றினர். இதையடுத்து லாரிகளில் ஏற்றப்பட்ட உர மூட்டைகள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள தனியார் உர விற்பனை கடைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. தட்டுப்பாடு இன்றி

இது குறித்து தஞ்சை மாவட்ட வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 5 ஆயிரத்து 248 எக்டேர் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12-ந்தேதி தண்ணீர் திறந்தால் 43 ஆயிரம் எக்டேர் குறுவை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது தண்ணீர் திறக்கமுடியாத நிலையில் சிறப்பு தொகுப்பு திட்டம் அறிவிக்கப்பட்டு இருப்பதால் இன்னும் 31 ஆயிரம் எக்டேரில் குறுவை நெல் சாகுபடி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்திற்கு தேவையான உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 4 ஆயிரத்து 631 டன் யூரியாவும், 1,680 டன் டி.ஏ.பி.யும், 1,132 டன் பொட்டாஷ் உரமும், 1,142 டன் காம்ப்ளக்ஸ் உரங்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தனியார் உர விற்பனை நிலையங்களில் 1,878 டன் யூரியாவும், 1,018 டன் டி.ஏ.பி.யும், 1,198 டன் பொட்டாஷ் உரமும், 399 டன் காம்ப்ளக்ஸ்

உரங்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் விவசாயத்திற்கு தேவையான யூரியா உரம் தட்டுப்பாடு இன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**தொடர் மழை எதிரொலி தோட்டக்கலைத் துறை மூலம் மானிய விலையில் தேயிலை நாற்று விநியோகம்**

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில் தோட்டக்கலைத்துறை மூலம் மானிய நிலையில், தேயிலை நாற்று விற்பனை செய்யப்படவுள்ளது. இதை வாங்கிச் செல்ல விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் 60 சதவீத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் தேயிலை விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக தேயிலை விவசாயம் பாதிக்கப்பட்ட போதிலும், 90 சதவீதம் பேர் மாற்றுத் தொழிலுக்கு செல்லாமல் தொடர்ந்து தேயிலை சாகுபடியை செய்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததாலும், தொடர்ந்து பசுந்தேயிலைக்கு உரிய விெல கிடைக்காத நிலையில், மலைப்பாங்கான பகுதிகளில் இருந்த தேயிலை தோட்டங்களை பெரும்பாலான விவசாயிகள் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டனர். ஆனால், கடந்த இரு ஆண்டுகளாக நீலகிரி மாவட்டத்தில் பருவமழை உரிய காலத்தில் பெய்து வருகிறது. இதனால், தேயிலை தோட்டங்கள் மட்டுமின்றி, மலை காய்கறி விவசாயமும் முன்னேற்றம் அடைந்துள்ளது. பொதுவாக கோடை காலமான மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை மட்டுமே ஊட்டியில் வெயிலை பார்க்க முடியும். ஆனால், இம்முறை கோடை காலத்திலும்

நீலகிரியில் மழை கொட்டித் தீர்த்தது.

இதனால், நீலகிரி மாவட்டமே இம்முறை பசுமையாக காட்சியளிக்கிறது. இதனால், நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தேயிலை தோட்டங்களில் புதிய நாற்று நடவு செய்யும் பணி மற்றும் உரமிடும் பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், விவசாயிகளின் நலன் கருதி தற்போது மானிய விலையில் தோட்டக்கலைத்துறை தேயிலை நாற்று விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கூடலூர், ேதவாலா போன்ற பகுதிகளில் உள்ள தோட்டக்கலைத்துறை பண்ணைகள் மூலம் தேயிலை நாற்று விற்பனை செய்யவும் முடிவு செய்துள்ளது.

இது குறித்து தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மணி கூறியதாவது: நீலகிரி மாவட்டத்தில் தற்போது பருவமழை பெய்து வருவதால், விவசாயிகள் தங்கள் தோட்டங்களி-ல புதிய தேயிலை தோட்டம் அமைக்கவும், தேயிலை தோட்டங்களில் இடை நடவு செய்வதற்கும் தோட்டக்கலை துறை மூலம் தேயிலை நாற்று சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படவுள்ளன. ஒரு தேயிலை நாற்றின் விலை ரூ.2 மட்டுமே. இந்த தேயிலை நாற்றுகள் தும்மனட்டி, தொட்டபெட்டா, அரசு தோட்டக்கலை பண்ணை, நஞ்சநாடு, கோல்கிரைன், குன்னூர் பழவியல் நிலையம், தேவாலா மற்றும் காட்டேரி ஆகிய பகுதிகளில் உள்ள பண்ணைகளிலும் தயார் நிலையில் உள்ளன. விவசாயிகள் தங்கள் பகுதி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், உதவி வேளாண்மை அலுவலர்கள், சேரிங்கிராஸ் பகுதியில் உள்ள தோட்டக்கலை தகவல் மையத்தினை தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தேயிலை நாற்றுகளை 50 சதவீதம் மானியத்தில் பெற்றுச் செல்லலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

**ஊட்டியில் சணல் கண்காட்சி துவக்கம்**

ஊட்டி, : ஊட்டியில் சணல் பொருட்கள் கண்காட்சி துவங்கியது. தேசிய சணல் வாரியம் மற்றும் சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிப்போ) சா◌ா◌பில் சார்பில் ஊட்டி சேரிங்கிராஸில் உள்ள யுஎஸ்எஸ்எஸ் வளாகத்தில் 5 நாள் சணல் கண்காட்சி நேற்று தொடங்கியது. கண்காட்சியை மகளிர் மேம்பாட்டு திட்ட இயக்குநர் பழனிகுமார் தொடங்கி வைத்தார். கண்காட்சியில் சணலில் தயாரான கைப்பை, ஷாப்பிங் பை, பைல், பர்ஸ், சாவி கொத்து, வளையல், ஆபரணம், சுவர் அலங்காரம், தரை விரிப்பு ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதில் தேசிய சணல் வாரிய சந்தை விளம்பர அதிகாரி டி.ஐயப்பன் கூறியதாவது: சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம்(சிப்போ) மூலம் 23 ஆண்டுகளாக மத்திய, மாநில அரசுகளுடன் இணைந்து 58 கண்காட்சிகளை நடத்தியுள்ளது. உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஊட்டியில் 3வது முறையாக இக்கண்காட்சி நடத்தப்படுகிறது. வரும் 9ம் தேதி வரை நடக்கும் கண்காட்சியில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சணல் பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் சிறு, குறு சணல் பொருட்கள் உற்பத்தியாளர்கள் ஏராளமானோர் உள்ளனர். சணல் தரை விரிப்பு, சணல் கைப் பை, சுவர் அலங்காரம் ஆகிய பொருட்கள் அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சணலினால் ஆன பொருட்கள் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பயன்படுத்தலாம்.

சணல் பொருட்கள் பயன்படுத்தி தயார்செய்யப்படும் பைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்தாகவும், மறுசுழற்சி ◌ெசய்தும் பயன்படுத்தலாம். கேரள மாநிலத்தில் சணல் பொருட்கள் விற்பனை அதிகமாக உள்ளது. அவர்கள் ஆண்டுக்கு ரூ.200 கோடி மதிப்பில் சணலினால் ஆன தரைவிரிப்பை ஏற்றுமதி செய்கின்றனர். மேலும், சாலைகள் அமைக்க

சணல் மற்றும் தேங்காய் நார் பயன்படுத்துவது அங்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்கான அரசாணையை கேரள அரசு பிறப்பித்துள்ளது. சணல் பொருட்கள் உற்பத்தி செய்வதற்காக உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி, ஏற்றுமதிக்கான சந்தை பயிற்சி அளிக்கப்படுகிறது. பொருட்களை சந்தைப்படுத்த கண்காட்சிகள், அரங்குகள் அமைத்து தரப்படுகின்றன. மேலும், வெளிநாடு பயிற்சிக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படும். இவ்வாறு ஐயப்பன் கூறினார். இந்நிகழ்ச்சியில், சென்னை சணல் வாரியம் மற்றும் சிப்போ நிறுவன பொது மேலாளர்பழனிவேல் முருகன் உட்பட பலர்கலந்து கொண்டனர்.

**நடப்பு பருத்தி சீசனில் கையிருப்பு தாராளம் பருத்தி விலையில் ஸ்திரத்தன்மை நிலவும்**

கோவை, : நடப்பு பருத்தி சீசனில் பருத்தி கையிருப்பு தாராளமாக இருக்கும் என்பதால், பருத்தி விலையில் ஸ்திரத்தன்மை நிலவும் என்று தென்னிந்திய மில்கள் சங்கம் (சைமா) தலைவர் ராஜ்குமார் கூறினார். இது குறித்து ராஜ்குமார் கூறியதாவது:இந்தியாவில் பருத்தி கையிருப்பு 201415 நடப்பு பருத்தி சீசனில் 60 முதல் 70 லட்சம் பேல்களாக இருக்கும். அதனால் பருத்தி விலையில் ஒரு ஸ்தரத்தன்மை நிலவும். நாட்டில் பருத்தி கையிருப்பு வரும் 201516 பருத்தி சீசனில் திருப்திகரமாக இருக்கும். அதனால், பருத்தி சந்தையிலும் ஒரு ஸ்திரத்தன்மை நிலவும். இந்த திருப்திகரமான பருத்தி கையிருப்பு ஜவுளித்தொழிலில் ஏற்றுமதிக்கு உதவும். குறிப்பாக ஆடை ஏற்றுமதிக்கு அதிகம் உதவும். சாதாரண நிலையில் பஞ்சாலைகள் மூன்று முதல் 6 மாதங்களுக்கு பஞ்சை இருப்பு வைத்து கொள்வது இயல்பு. ஆனால், பருத்தி விலையில் ஏற்பட்ட ஏற்ற, இறக்கங்களால் பெரும் இழப்பை சந்தித்ததால், பஞ்சாலைகள் பஞ்சு கையிருப்பை ஒன்று முதல் 2 மாதங்களாக குறைத்து கொண்டனர். மேலும் ஜவுளித்தொழில் மேம்பாட்டு நிதி உதவி 201415 சீசன் காலத்தில்

பஞ்சாலைகளுக்கு கிடைக்காததால், அவர்களால் பருத்தி வாங்க முடியவில்லை.

உலக சந்தையில் நூலுக்கு தேவை குறைந்ததால் பஞ்சாலைகள் தற்போது சுணக்க நிலையை சந்தித்து வருகின்றன. நூல் சந்தையில் ஒரு திருப்திகரமான நிலைமை ஏற்பட வேண்டுமானால், குறைந்தபட்சம் 20 முதல் 30 மில்லியன் கிலோ ஒரு மாதத்திற்கு அதிகப்படியாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். எம்.இ.ஐ.எஸ்., திட்டத்தின் கீழ் மத்திய அரசு தேவையான உதவி செய்ய வேண்டும். வட்டி மானியம் வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் உலகளவில் இந்தி ஜவுளி பொருட்கள் போட்டியிட முடியும். மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு ராஜ்குமார் கூறினார்.

**தடை செய்யப்பட்ட நூடுல்ஸ் பாக்கெட்டுகளை திருப்பி அனுப்ப வேண்டும் வணிகர்களுக்கு வேண்டுகோள்**

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் வணிகர்கள் தங்கள் வசமுள்ள தடை செய்யப்பட்ட நூடுல்ஸ் பாக்கெட்டுகளை உடனடியாக சம்மந்தப்பட்ட நிறுவனத்துக்கு திருப்பி அனுப்ப வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மேகி நூடுல்ஸ் மற்றும் ஸ்பித் அண்ட் ஜோன்ஸ் நூடுல்ஸ் ஆகியவற்றை பொதுமக்களின் பொது சுகாதார நலனை முன்னிறுத்தி கடந்த 4ம் தேதி முதல் 3 மாதங்களுக்கு தடை செய்து தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

எனவே வணிகர்கள், நூடுல்ஸ் பொட்டலங்களை உடனடியாக தங்களின் வினியோகஸ்தர்கள் வழியாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு திருப்பி அனுப்ப வேண்டும். தடை செய்யப்பட்ட நூடுல்ஸ் உணவு பொருட்களை தொடர்ந்து விற்பனை செய்யும் பட்சத்தில் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே பொதுமக்கள், நுகர்வோர் அமைப்பினர் போன்றோர் தடை செய்யப்பட்ட நூடுல்ஸ் பாக்கெட்கள் விற்பனை குறித்து புகார் அளிக்க

மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் அலுவலகத்துக்கு நேரிலோ அல்லது 0431-2333330 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு புகார் தொிவிக்கலாம். மேலும் உணவு விடுதிகள், உணவகங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் தங்கும் விடுதிகளிலும் தடை செய்யப்பட்ட நூடுல்ஸ் உபயோகப்படுத்தக்கூடாது. இவ்வாறு இவ்வாறு கலெக்டர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

**5,000 மரக்கன்றுகள் நடும் பணி துவக்கம்**

திருச்சி, : உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி திருச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் 5,000 மரக்கன்றுகள் நடும் பணி நேற்று துவங்கியது. உலக சுற்றுச்சூழல் தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி திருச்சி மாவட்ட பள்ளிகளில் 5,000 மரக்கன்று நடும் பணி நேற்று துவங்கியது. திருச்சி பாலக்கரை சையது முர்துஷா மேல்நிலைப்பள்ளியில் மரக்கன்று நடும் விழா நேற்று காலை 10 மணிக்கு நடந்தது. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆனந்தி பங்கேற்று மரக்கன்றுகளை நட்டு விழாவை துவக்கி வைத்தார். மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் வசந்தா, பள்ளி தலைமை ஆசிரியர் வேலுச்சாமி, மாணவர் சுற்றுச்சூழல் மன்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சந்திரசேகர், ஈஷா யோக மையத்தை சேர்ந்தவர்கள் பங்ேகற்றனர்.

மாவட்டத்தில் 350 பள்ளிகளில் மாணவர் சுற்றுச்சூழல் மன்றம் செயல்படுகிறது. அதேபோல் 250 பள்ளிகளில் பசுமைபடை அமைக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மத்திய, மாநில அரசுகள் நிதி ஒதுக்கி பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகிறது. அதன்படி மாணவர்களுக்கு நேற்று போட்டிகள் நடந்தது.

**குறுவை நாற்றங்கால் தரமாக தயாரிப்பது எப்படி? வேளாண்துறை ஆலோசனை**

நீடாமங்கலம், : குறுவை நாற்றங்கால் தரமாக தயாரிப்பது எப்படி என வேளாண் துறை விளக்கம் அளித்துள்ளது. நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் பாஸ்கர், உதவி பேராசிரியர் ரமேஷ் ஆகியோர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: குறுவை நாற்றங்கால் தயாரிப்பு மற்றும் விதைப்பு செய்ய ஒரு ஏக்கர் நடவு செய்ய 8 சென்டு நாற்றங்கால் தேவைப்படும்.நீர்ப்பாசனம் வடிகால் வசதியுள்ள நிலமாகவும், நிழல் படாதவாறும் மற்றும் மின்கம்பத்திற்கு அருகில் இல்லாமலும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். கடைசி உழவுக்கு முன்பு 400கிலோ தொழு உரத்தை அடியுரமாக இட்டு நன்றாக பரப்ப வேண்டும். மேலும் 16 கிலோ டிஏபி அல்லது 6.4 கிலோ யூரியா , 48 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை அடியுரமாக இடவேண்டும். பின்பு 20க்கு2 மீட்டர் (1சென்ட்)அளவில் மேட்டுப்பாத்தி அமைத்து நன்கு சமன் செய்து அதற்கு, இடைவெளி சிறு கால்வாய் அமைக்க வேண்டும். ஈரான மேட்டு பாத்திகளில் முளை கட்டிய விதைகளை சென்டுக்கு 3கிலோ விதை என்ற அளவில் சீராக தூவி விதைக்க வேண்டும். (திருந்திய நெல் சாகுபடிக்கு 2 முதல் 5 கிலோ விதை போதுமானது. அதை பாய்நாற்றங்கால் விதைப்பு செய்ய வேண்டும். களை நீக்குவதற்கு விதைத்த 18 அல்லது 24 மணி நேரத்தில் நாற்றங்காளில் சிறிதும் தண்ணீர் தேங்காமல் வடித்துவிட வேண்டும். இல்லை எனில் விதைகளின் முளைப்புதிறன் பாதிக்கப் படும். ஆனால் நாற்றங்காலில் ஈரம் காயாமல் பார்த்துக்கொள்ளவும். விதைத்த 8ம் நாள் 80மிலி பூட்டாகுளோர் அல்லது தயோபேன்கார்ப் களைக்கொல்லிகளை மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். பின்பு 2,3 நாட்களுக்கு நீரை வடிக்கட்ட கூடாது. வாலிப்பான நாற்றுகளை பெற, நன்றாக செழித்து வளரவில்லை எனில் 4கிலோ யூரியா அல்லது 8

கிலோ அமோனியம் சல்பேட் உரமிடலாம். களிமண் நிலமாக இருந்தால் நாற்றுகளில் வேர்கள் அறுபடுவதை தடுப்பதற்கு 2 கிலோ ஜிப்சத்தினை நாற்று பறிப்பதற்கு 2, 3 நாட்கள் முன்னதாக இட வேண்டும். 3 முதல் 5 இலைகளுடைய 25 வயது நாற்றுகளை பறித்து நட வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

**செயற்கை உரம் தயாரிப்பு பணிஅதிகாரி ஆய்வு**

கரூர், : கரூர் மாவட்டம் கே.பேட்டை ஊராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் குப்பைகள் சேகரிக்கப்பட்டு தரம் பிரித்து செயற்கை உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெறுகிறது. இதனை கலெக்டர் ஜெயந்தி பார்வையிட்டார். அப்போது அவர் கூறுகையில், குப்பைகளை சேகரித்து செயற்கை உரம் தயாரிப்பதுடன் ஊராட்சி பகுதியையும் தூய்மையாக வைத்துக்கொள்ள முடியும். அனைத்து ஊராட்சியிலும் தனிநபர் இல்ல கழிப்பறை கட்டுவதற்காக ரூ.12,500 நிதி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தை பயன்படுத்தி முழுசுகாதாரத்தை கடைபிடித்து ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்றார். குளித்தலை ஆர்டிஒ சக்திவேல், ஊரக வளர்ச்சி முகமை திட்ட செயற்பொறியாளர் கவிதா, ஊராட்சிகள் உதவி இயக்குனர் விஜயலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நாகராஜன், பன்னீர்செல்வம், பொறியாளர்கள் தமிழன்பன், சரவணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொப்பரை, தேங்காய் ஏல விற்பனை**

ஈரோடு, : மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை கொப்பரை மற்றும் தேங்காய் ஏலம் நடைபெறுவது வழக்கமாகும். இந்த வாரத்தில் மொடக்குறிச்சி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் ஒரு டன் எடை கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தர கொப்பரை அதிகபட்சம் கிலோ ரூ.78க்கும், குறைந்தபட்சம் ரூ.68 க்கும்,

இரண்டாம் தர கொப்பரை அதிகபட்சம் ரூ.60.10க்கும், குறைந்தபட்சம் ரூ.40.50க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.61 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. இதேபோல் 5 ஆயிரத்து 782 கிலோ எடையுள்ள 17 ஆயிரத்து 655 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில் அதிகபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 21 ஆயிரத்து 378க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.17 ஆயிரத்து 758க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.1லட்சத்து 12 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றதாக அதிகாரிகள் கூறினர்.

**தனியாக நின்றால் இலக்கை அடைய முடியாது விவசாயிகள் வேளாண்துறையுடன் இணைந்து செயல்பட வேண்டும் வேளாண் பல்கலை துணைவேந்தர் அறிவுரை**

திருவிடைமருதூர், : விவசாயிகள் எக்காரணம் கொண்டும் தனியாக நின்று குறிப்பிட்ட இலக்கை எட்ட முடியாது. வேளாண்மை துறையோடு இணைந்து செயல்பட வேண்டும் என்று கோவை வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் ராமசாமி கூறினார். திருவிடைமருதூர் அடுத்த ஆடுதுதுறையில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது. இங்கு பண்ணை இல்ல ஒலிபரப்பு பொன்விழா ஆண்டு தொடக்கவிழா நேற்று நடைபெற்றது. கோவை வேளாண்மை பல்கலைகழக துணைவேந்தர் ராமசாமி தலைமை வகித்தார். திருச்சி வானொலி நிலைய துணை தலைமை இயக்குநர் வாசுகி முன்னிலை வகித்தார். முன்னாள் பண்ணை வானொலி அலுவலர் வான்மதி கண்ணன், வானொலி உழவர் சங்க தலைவர் முருகானந்தம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். வானொலி உழவர் சங்க மலரை வெளியிட்டு கோவை வேளாண் பல்கலைக்கழ துணைவேந்தர் ராமசாமி பேசியதாவது: விவசாயம் மேம்படுத்துவதற்கு வானொலி போன்ற ஊடகங்களின் மூலம்தான் வேளாண்மை செய்திகளை தொழில்நுட்பங்களை எப்பகுதியில் இருக்கும் விவசாயிகளுக்கும்

கொண்டு செல்வது எளிதாகிறது. தற்போது நாட்டில் 125 கோடி மக்களுக்கும் விளை நிலங்கள் குறைந்த நிலையிலும் தேவையான உணவு உற்பத்தி செய்ய முடிகிறது. 262 மில்லியன் டன் உணவு உற்பத்தி தற்போது நடக்கிறது. சாதாரண அளவை விட 30 சதவீதம் அதிகம். நிலத்தையும் நீரையும் நம்பினால் நாம் நல்லாயிருக்கலாம். கடந்த 3 ஆண்டுகளில் சிறுதானிய பயிர் சாகுபடி செய்வது அதிகரித்து வருகிறது. விவசாயம் 17 சதவீதமாக குறைந்து விட்டது. விவசாயிகள் தனியாக நின்று எக்காரணம் கொண்டும் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாது. வேளாண்மை துறையோடு இணைந்து செயல்பட வேண்டும். தொழில் நுட்பத்தை கொண்டு பல்வேறு யுத்திகளோடு உற்பத்தி திறனை பெருக்க முன்வரவேண்டும். வரும் காலத்தில் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் உலகலாவிய ஆராய்ச்சி மையமாக தரம் உயரும் வகையில் பல்வேறு மேம்பாட்டு ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

வேளாண் இணை இயக்குநர் நாகை கணேசன், தஞ்சை சேகர், திருவாரூர் மயில்வாகனன், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ரவி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். திருச்சி வானொலி நிகழ்ச்சி பிரிவு தலைவர் ஜோதிமணி வரவேற்றுப் பேசினார். சரவணன் நன்றி கூறினார். சிறப்பு வேளாண்மைத்துறை மற்றும் ஆராய்ச்சி துறை சார்பில் வேளாண் கண்காட்சி நடைபெற்றது.

**நாட்டுக்கோழி பண்ணை அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் ஜூன் 15ம்தேதி கடைசி**

தஞ்சை, :பண்ணை அமைத்து நாட்டுக்கோழி வளர்க்க விருப்பமுள்ள விவசாயிகள் வருகிற 15ம்தேதிக்குள் விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 2012-13ம் ஆண்டு கோழி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 35 பேருக்கு நாட்டுக்கோழி குஞ்சுகள் வழங்கப்பட்டது. 2013-14ம் ஆண்டில் 240 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழிக்குஞ்சும் மற்றும் 2014-15ம் ஆண்டில் ஒரு பயனாளிக்கு

ரூ.1.29 லட்சமும் வழங்கப்பட்டது. திட்ட மதிப்பீட்டில் மொத்தம் 160 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இவ்வாண்டும் இதேபோல் 160 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட உள்ளது. இதில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் கோழி கொட்டகை அமைத்திட, குஞ்சு மற்றும் தீவனம், உபகரணங்கள் வாங்கிட முதல் தவணையாக 25 சதவீத மானிய தொகை ரூ.32 ஆயிரத்து 375 மாநில அரசால் வழங்கப்படும். திட்டத்தின் இறுதியில் 25 சதவீத மானிய தொகையும், ஆதிதிராவிடர்களுக்கு 33 சதவீத மானிய தொகையும் நபார்டு வங்கி மூலமாக வழங்கப்படும். முதல் தவணை கோழிகுஞ்சுகள் 100 சதவீத மானியத்திலும், 2வது தவணை கோழிகுஞ்சுகள் 50 சதவீத மானியமாக ரூ.3,125க்கும், 3வது தவணை கோழிகுஞ்சுகள் 30 சதவீதம் மானியமாக ரூ.1,875க்கும் கால்நடை பராமரிப்புத் துறையால் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் 5 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். ஒரு பயனாளிக்கு ஒருமுறை மட்டுமே மானியம் வழங்கப்படும். நாட்டுக்கோழி பண்ணை அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் கால்நடை பராமரிப்பு துறை அல்லது அவர்களது குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலமாக விண்ணப்பிக்கலாம். தஞ்சை மாவட்டத்தில் நாட்டுக்கோழிப் பண்ணை அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் அதற்கான விண்ணப்பங்களை வரும் 15ம்தேதிக்குள் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் தஞ்சை கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.